1269

ஜகன்மோகினி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

JL
ஊ211, N1225M
N36·13·3.
182985

...ன்மோகினி" ஆபீஸ்
...28. தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை.

மலர் 13
இதழ் 3

ஸ்ரீமதி

வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய நாவல்கள்.

26½ ரூபாய்க்கு 31 நாவல்கள்.

"ஜகன்மோகினி" சந்தாதாரர்களுக்கு குறைந்த விலை.

	ரூ.	அ.	ரூ.	அ.
வைதேகி (2 பாகங்கள்)	2	8	2	0
ராதாமணி (2 பாகங்கள்)	2	8	2	0
சாருலோசனு (2 பாகங்கள்)	2	8	2	0
பத்மசுந்தரன்	2	8	2	0
காதலின் கனி	2	8	2	0
நவநீதகிருஷ்ணன்	2	0	1	12
ருக்மிணிகாந்தன்	2	0	1	12
சாமளநாதன்	2	0	1	12
தியாகக்கொடி	2	0	1	12
மங்களபாரதி	2	0	1	12
சண்பகவிஜயம்	1	12	1	8
கௌரீமுகுந்தன்	1	12	1	8
ஸாரமதி	1	12	1	8
சோதனையின் கொடுமை	1	8	1	4
பரிமளகேசவன்	1	4	1	0
உத்தமசீலன்	1	4	1	0
சுகந்தபுஷ்பம்	1	0	0	14
கதம்பமாலை	1	0	0	14
கோபாலரத்னம்	0	14	0	12
புத்தியே புதையல்	0	14	0	12
பட்டமோ பட்டம்	0	10	0	8
நளினசேகரன்	0	8	0	6
வீரவஸந்தா	0	8	0	6
மூன்று வைரங்கள்	0	8	0	6
படாடோபத்தின் பரிபவம்	0	8	0	6
பிச்சைக்காரக் குடும்பம்	0	8	0	6
ஆனந்தஸாகர்	0	8	0	6
பக்ஷமாலிகா	0	6		
ஜயஸஞ்சீவி	0	4		
சுகுண பூஷணம்	0	4		
அம்ருததாரா	0	4		

ரூ. 5-க்கு மேற்பட்டு ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் மொத்த விலையில் மூன்றிலொரு பங்கைக் குறைத்து மீதியை அனுப்பினால் தபால் செலவின்றி புத்தகங்களை அனுப்புகிறோம்.

"ஜகன்மோகினி" ஆபீஸ்,

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

விசேஷ அறிவிப்பு

நமது விளம்பர விகிதம்.

1 பக்கத்துக்கு ஒருமுறை	ரூ.	10	0	0
½ பக்கத்துக்கு ,,	,,	5	8	0
¼ பக்கத்துக்கு ,,	,,	3	0	0
கடைசி பக்க உள்ளட்டைக்கு ஒரு முறை	,,	10	0	0
முதற்பக்க உள்ளட்டைக்கு ,,	,,	12	0	0

விசேஷ விளம்பரங்கள்

சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கத்திலும் கதைக்குக்கீழ் 1 வரி விளம்பரச் செய்திபோட ஒருமுறை	ரூ.	0	8	0
ஒரே காலத்தில் 48 வரிகள் 1 சஞ்சிகையின் 1 வெளியீடு முழுவதிலும் போட ஒரு முறை	,,	20	0	0
கதை முடியும் அத்தியாயங்களின் இறுதியில் 1 பக்கத்தில் அநுமதிக்க ஒரு முறை	,,	15	0	0

நீண்டகால விளம்பரங்களுக்கும், ஒப்பந்த விளம்பரங்களுக்கும் தனிச் சலுகை காட்டப்படும். ஸினிமா, இன்ஷியூரன்ஸ் போன்ற கம்பெனிகளுக்கு விசேஷ வசதிகளுடன் விளம்பரஞ் செய்வதோடு, முக்கியத்துவமும் பிரதான்யமும் கொடுக்கப்படும்.

மற்ற விவரங்களுக்கு ... விளம்பர மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

Advertisment Manager.

வாய்க்கு மிகவும் ருசிகரமாயுள்ளது. குணத்திற்கு தங்க மெடல்கள் பரிசுபெற்றது.

டாக்டர். எம். பி. ஏ. "நரசிம்ம லேகியம்" No. I

(வீர்ய ... விருத்தியில் பிரசித்தி பெற்றது.)

இதில் தங்கம், வெள்ளி, அயசாந்தம் முதலிய பற்ப செந்தூரங்களும், வித்தினககளும், புஷ்பங்கள், பலவித பழச்சாறுகள், பசும்பால், நெய், தேன், கற்கண்டு இவைகள் சேர்த்து செய்தது. ஒரே வேளையில் குணம பார்க்கலாம். இதை காலே, மாலே பத்தியமின்றி சுண்டைக்காய் அளவாய் சாப்பிட்டுவர விந்துநாகத்தை உறைப்பண்ணி சர்வநரம்புகளுக்கு முறுக்கேற்றி, போகத்தில் அதிக சக்தியைத்தரும்.

தீரும் வியாதிகளாவன:—நெடுநாள்பட்ட ஜுரம், ஈளை, இருமல் சூலை, இடுப்புப்பிடிப்புகள், கீல்வாயு, மூலவாயு, வயிற்றுப்போக்கு, கிரஹணி முதலியவற்றை கண்டித்து சுக்லாசயம், கிட்னி, மூத்திரப்பை, கர்ப்பாசயம், மூளை இவற்றிக்கும் பலத்தைத் தந்து நல்ல ஞாபகசக்தியையும் தாதுவிருத்தியையும் தரும். ஒருமுறை பரீக்ஷிக்க உண்மை விளங்கும். இன்றே பரீக்ஷியுங்கள்.

80 வேளைகொண்ட பெரிய டின் 1 சேர்	ரூ. 5.	டஜன் 1க்கு	ரூ. 54
40 ,, சிறிய டின் ½ சேர்	ரூ. 3.	,,	ரூ. 30

V. P. சார்ஜ் வேறு. டஜன் கணக்காய் வாங்கினுல் தபால் சார்ஜ இனும்

இலவச கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

இடைக்குமிடம்:— டாக்டர் எம். பி. ஏ.

"தாருண்ய—ஷிபா" மெடிகல் ஹால், திண்டுக்கல். (S.I.Ry.)

"லக்ஷ்மி"

ஓர் உயரிய தமிழ் மாதப் பத்திரிகை.

எளிய நடையில் பல அரிய விஷயங்களுடன்

மாதம் ஒரு முறை வெளிவரும்.

பெண்களும், குழந்தைகளும், ஆவலுடன் வாசிக்கக் கூடிய சுவை பொருந்தியது.

உள் நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 0 0
வெளி நாட்டுக்கு வருட சந்தா ரூ. 1 8 0

மானேஜர் "லக்ஷ்மி" ஆபீஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

FRET WORK FURNITURE

(made of plywood)

The best Novelties of the day for everybody's use and house decorating purposes

உயர்தர ப்ளேவுட் பலகையில்

தயாரிக்கப்பட்ட நேர்த்தியான பலவகை
நூதன மரக் கண்காட்சி சாமான்கள்

உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், ஸ்திரீகள் தினசரி உபயோகிக்கவும், பரிசளிப்பதற்கும், வீடுகளை அலங்கரிப்பதற்கும் சிறந்தவை.

M. P. ஜெகந்நாத்

ப்ரட்வர்க்கர், 1459, மேல உத்திர வீதி, ஸ்ரீரங்கம். S. I.

"ஜகன்மோகினி" அன்பர்களுக்கு ஒரு நற்செய்தி

அரிய சந்தர்ப்பம்! விசேஷ சலுகை!!

காலஞ்சென்ற பண்டித திரு. ராகவாசாரியார்
இயற்றிய நூல்கள்

		ரூ.	அ.	பை.
1.	துருவ வெண்பா	0	8	0
2.	சம்பு ராமாயணம்	0	10	0
3	நீதி மஞ்சரி	0	5	0
4.	திருமால் வெண்பா	0	4	0
5.	சிவபிரான் துதி	0	3	0
6.	ராஜராஜேசுவரி	0	2	0
		2	0	0

சந்தா நெ. குறிப்பிட்டு ஆர்டர் செய்யும் அன்பர்களுக்கு மேற்கண்ட புத்தகங்களையெல்லாம் ஒரே காலத்தில் வாங்கினால் ரூ. 1-8-0க்குக் கொடுக்கப்படும். தனித்தனியாக வாங்குவதனால் தபால் செலவு இனாம்.

வி. பி. கிடையாது. முன்பணம் தான் அனுப்பவேண்டும்.

விலாசம்:- ஜி. ஆர்.
c/o "ஜகன்மோகினி"
திருவல்லிக்கேணி.

புதிய சந்தா நேயர்களுக்கு

அரிய சந்தர்ப்பம்.

சென்ற ஆண்டில் வெளியான மூன்று அதியற்புதமான
நாவல்களைப் படித்தீர்களா ?

பொங்கும் காதல்
அல்லது
மங்கள பாரதி

பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தவலாகர்

இல்லையேல், ரூ. 1-8-0 முன்பணமனுப்பி மிகவும் குறைந்த (சந்தா) விலையில் உடனே பெற்றுக் கொள்ளுங்கள். சொற்ப காபிகளே கைவசமிருப்பதால் முந்துங்கள்.

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

வாங்கிப்படியுங்கள்! சினிமாப் பிரியர்க்கோர் நல்விருந்து!

ஆடல் பாடல்

ஓர் சிறந்த சினிமா சங்கீத வாரப்பத்திரிகை
சனிக்கிழமைதோறும் வெளிவருகின்றது.

சினிமா, சங்கீதம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகளைப்பற்றிய கட்டுரைகள், ஆடல் பாடல் பிரமுகர்களின் வாழ்க்கைக் குறிப்புகள், ஆடல் பாடல் செய்திகள், பேசும் படங்களைப்பற்றிய விமர்சனங்கள் முதலியனவும், மற்றும்

'பிரேமாவதி' என்ற தொடர் நவீனமும் கொண்டு நல்ல கிளேஸ் பேப்பரில் அழகிய படங்களுடன் பிரசுரமாகி வருகின்றது;-

தனிப்பிரதி விலை அணா 0—0—6 வருடசந்தா ரூ. 2—0—0

எல்லா ஏஜெண்டுகளிடமும் கிடைக்கும்.

"ஆடல் பாடல்" முதல் மலர். (1935ம் ஆண்டு வெளி வந்த இதழ்களையும் ஆண்டு மலரையும் சேர்ந்தது காலிகோ அட்டையுடன் பயிண்டு செய்யப்பட்ட அழகிய புத்தகம்)

ஒவ்வொரு கலா ரசிகனும், பெறவேண்டியதவசியம்.

விலை ரூபாய் 1—8—0 தபால்செலவு பிரத்தியேகம்.

வேண்டுவோர் முன்பணமாக அணா 0—8—0 அனுப்புங்கள்.

எமது விலாசம்:—

ஆடல் பாடல் ஆபீஸ்.
6 சங்குராம செட்டி தெரு, சென்னை

உலக அனுபவங்களைக் கண்டபடி எழுதுவதில் அன்றும்

இன்றும் ஒப்புயர் விலாத ஆசிரியர் காலஞ்சென்ற

ஸ்ரீமான் S. G. இராமானுஜலு நாயுடுகாரு எழுதிய

அபூர்வ புத்தகங்கள்

	ரூ.	அ.		ரூ.	அ.
ஹம்ஸதேவி	0	3	பதினெட்டாம்பாவை	0	8
கங்காதரன்	0	3	பன்னிரு மரகதங்களின் மர்மம்	3	0
சரஸ்வதி	0	9	விசித்திர துப்பறியும் கண	3	0
பாலிகா கல்பகம்	0	6			

ஸ்ரீமான். J R. ரங்கராஜுகரால் எழுதப்பட்ட நிகரற்ற

துப்பறியும் நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ
இராஜாம்பாள்	0	12	இராஜேந்திரன்	1	0
சந்திரகாந்தா	0	12	வரதராஜன் (2 பாகம்)	2	0
மோஹன சுந்தரம்	0	12	விஜயராகவன்	1	0
ஆனந்த கிருஷ்ணன்	0	12	ஜெயரங்கன்	1	8

ஒரு புஸ்தகத்தின் சுவை அது விற்பதிலிருந்தே நன்கு புலப்படும். மேற்சொன்ன எல்லா நாவல்களும் ஒவ்வொன்றும் பல பதிப்புகள் 27-வது பதிப்புவரை வெளிவந்திருப்பதிலிருந்தே அவைகளுக்குச் சமதையான நாவல்கள் தமிழ் நாட்டில் இல்லவேயில்லை என்பதை நிரூபிக்கிறதல்லவா? மேற்சொன்ன நாவல்களில் எதாவதொன்றை படித்தால் அதன் சுவையே அவ்வாசிரியரால் எழுதப்பட்ட எல்லா நாவல்களையும் வாசிக்கும்படி தூண்டுமென்பதில் சந்தேகமில்லை. அவைகளை வாசித்து ஆனந்தித்த லட்சக் கணக்கானவர்களைப்போல தாங்களும் சந்தோஷப் படவேண்டாமா? இன்றே எழுதுங்கள்.

JUN 1933

11-வது அதிகாரம்

பூ பட்ட கண்ணில் புண்ணும் கிளம்பியது

தன் தந்தை படும் துன்பத்தைக் கண்டு சகிக்க முடியாத சந்திராவின் மனம் தத்தளிக்கின்றது. சின்னஞ்சிறுமி என்ன செய்வாள் பாவம்! பல விதம் யோசித்து தனக்குள் ஓர் முடிவுக்கு வந்தாள். உடனே தன் தங்கைகளுக்குத் தைத்த பாவாடை சொக்காய்களேயும், தன் தாயார் வாங்கிய மற்றோர் புடவையையும் ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு சந்திராவின் பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயினியாகிய மனோன்மணியம்மாளிடம் தைரியமாகச் சென்று வெகு பணிவுடனும், மரியாதையாயும் வணங்கி தன் வீட்டு விஷயங்களை எல்லாம் உருக்கமாக எடுத்துக் கூறி "அம்மணீ! தாங்கள் என் தாயாரின் விஷயங்கள் முற்றும் அறிவீர்களாகையினால் உங்களிடம் நான் முன்பின் யோசிக்காமல் தைரியமாக வந்திருக்கிறேன். தாங்கள் ஜவுளி வாங்கப்போவதாயும், பாவாடைகள் தைக்கப்போவதாயும் நேற்று தங்கள் புதல்வியார் சொல்லக் கேட்டேன். இவைகளைத் தாங்கள் தயவுசெய்து எடுத்துக்கொண்டு இச்சமயம் எங்களுக்கு உபகாரம் செய்யவேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

இது கேட்ட உபாத்தியாயினி உண்மையிலேயே சந்திரா நன்றாகப் படிக்கின்றாள் என்று அவளிடத்தில் விச்வாசமும் மதிப்பும் வைத்திருப்பவளாதலால் சந்திராவின் குடும்பத்திற்கு நேர்ந்துள்ள விபரீதவிபத்திற்கு மனமுருகுகிறாள். எப்படியும்! தான் ஜவுளி எடுக்க வேண்டி இருப்பதால் இதைத்தான் எடுத்துக்கொண்டு உதவி செய்வோம் என்ற உதார குணம் தோன்றியது. ஆகையினால் அந்தம்மாள் மிக்க ப்ரீதியுடன் "சந்திரா! இந்த மாதிரி புடவை எனக்குப்

பிடிக்கவில்லை. இருந்தாலும் உனக்காக நான் இதை எடுத்துக் கொள்கிறேன். உன் குடும்பத்திற்கு திடீரென்று ஒன்றன்பின் ஒன்ருக நேர்ந்த ஆபத்தைக் கேட்க மிகவும் விசனமாகவிருப்பதால் அதற்காக இவைகளை எடுத்துக்கொள்கிறேன்." என்று கூறிவிட்டு ஜவுளிகளை எடுத்துக்கொண்டு பணத்தைக் கொடுத்துவிட்டாள்.

இதைக் கண்ட சந்திராவின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாது பொங்கியது. அவ்வளவு விரைவில் இரங்கி தனக்கு உதவி செய்துவிடுவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை யாகையினுல் இப் பேருதவிக்குப் பெரிதும் வியந்தாள். அந்தம்மாளுக்குத் தனது மனப்பூர்வமான நன்றி கூடிய வந்தனங்களைத் தெரிவித்துவிட்டு வீட்டிற்கு ஓட்டமாக வந்தாள்.

நாராயணன் துயரமே வடிவாய் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கையில் சந்திரா அவனெதிரில் சென்று "அப்பா! இவ்விதம் தாங்கள் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தால் காரியம் ஆகவேண்டாமா! கிழவி ப்ரக்ஞையற்றுக் கிடக்கிருள் என்ருல் உடனே அழைத்துவராவிட்டால் வீண் நிந்தனைக்கு இடமாகுமல்லவா! இதோ பணம் இந்தாருங்கள். அம்மா வாங்கிய எல்லா ஜவுளிகளையும் எனது தலைமை உபாத்தியாயினியிடத்தில் கொண்டுபோய் கெஞ்சிக் கூத்தாடி விற்று பணத்தை வாங்கிக்கொண்டு வந்தேன். இந்த சமயம் கடவுள் அந்தம்மாளின் மனத்தில் புகுந்து இப் பேருதவியை அவர்கள் மூலம் அளித்தார்.

அப்பா! நம்மைக் கடவுள் சோதிக்கின்ருரே யன்றி வேறில்லை. இனிமேல் விசனப்பட்டுக்கொண்டிருந்தால் நேரமில்லை. அவர்கள் என்று போகிருர்கள் என்று விசாரித்துக்கொண்டு கூடச் சென்று கிழவியை அழைத்துவாருங்கள். தள்ளாத ப்ராணன் தவிக்கும் பாவம்! காசி யாத்திரையின் பலனைக் கண்டாகிவிட்டது. எழுந்திருங்கள். நான் அம்மாவைக் கவனித்துக்கொள்கிறேன்." என்று சிறுமியாயினும் தைரியங்கூறித் தேற்றினுள்.

குழம்பித் தவித்துக்கொண்டிருந்த நாராயணனுக்கு தன் புதல்வி கூறிய வார்த்தையும், அவள் சாமார்த்தியமாயும் சமயோசித

மாயும் செய்துள்ள வேலையும் அவனுடைய அத்தனை மனத் துயரத்திலும் பெரிதும் ஆறுதலையளித்தது. தன் மகளை அன்புடன் அணைத்துத் தடவிக்கொடுத்து ஆநந்தக் கண்ணீர் விட்டான். "சந்திரா! இத்தகைய சமயத்தில் கடவுள் உனக்கு இம்மாதிரி யோசனையை அளித்து, அந்தம்மாளுக்கும் உதவி செய்யும் தாராள இருதயத்தை உண்டாக்கியதிலிருந்து மகா பாவியாகிய என்மீதும் ஒரு அணுவளவு கருணை செய்யும் உள்ளத்துடனிருப்பதாகவே அறிகிறேன். உம்...சோதனை என்பது யாரை விட்டது? எனக்கும் இத்தகைய பேருதவியைக் கடவுள் அளித்துக் காப்பாராவென்று ஏங்கித் தவித்தேன். நான் சென்று விசாரித்துக்கொண்டு வருகிறேன் என்று கூறிவிட்டு, தந்தி வந்தவர்கள் வீட்டிற்குச் சென்றான். தந்தியைத் தானே நேரில் பார்த்ததில் இவன் தாயாருக்குப் பலமான அதிர்ச்சியினுல் மூர்ச்சை ஏற்பட்டுக் கிடப்பதை யறிந்தான்.

ஆபீஸில் லீவு கொடுக்க மறுத்துவிட்டார்கள். தன் தாயாரின் நிலைமையை எடுத்துக்கூறி கெஞ்சிக் கூத்தாடி லீவு பெற்றுக்கொள்ளும் பாடு ப்ரம்ம ப்ரயத்தனமாகிவிட்டது. மறு தினம் காலை பம்பாய் மெயிலில் புறப்பட்டு அதற்கடுத்தநாள் காலையில் அந்த ஊரை யடைந்தான்.

ஸ்டேஷனில் இந்த யாத்ரா வாசிகள் அலங்கோலமாகக் கிடப்பதும் ஜனங்கள் இவர்களுக்கு ஒத்தாசை செய்வதும் வெகு கண்ராவிக் காட்சியாகவிருந்தது. யாத்ரீகர்களில் சிலருக்கு உடனே தந்திமணியார்டர் வந்துவிட்டதால் அவரவர்களின் ஊருக்குக் கிளம்பிவிட்டார்கள். சிலர் தாம் உத்தேசித்து வந்தபடியே காசி யாத்திரைக்கே கிளம்பிவிட்டார்கள். மிஞ்சிய பேர்கள் அந்த ஸ்டேஷனிலேயே ஒரு மரத்தடியில் சமயல் செய்து சாப்பிடுவதும் தம்தம் மனிதர்களின் வரவை எதிர்பார்த்திருப்பதுமாக விருந்தார்கள்.

"நாராயணன் வந்தானு! நாராயணனுக்குத் தந்தியடித்தீர்களா! ...ஐயோ! நான் அவனைத் தொந்தரவு செய்து அவன் ப்ராணனை வாங்கி அவன் மனவருத்தமுறும்படியாகச் செய்து 300 ரூபாய் வாங்

கிக்கொண்டு வந்தேனே! எனக்கும் காசியாத்திரை புண்ணியங் கிடைக்கவில்லை; அவனுக்கும் பணம் உதவவில்லை. பாழுங் கொள்ளைக்காரன் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டானே! என்ன செய்வேன்? நாராயணன் வந்தால் நான் என்ன பதில் சொல்வேன்? அவனை எப்படிப் பார்ப்பேன்? ஐயோ! எனக்கேன் இப்படிப்பட்ட ஆபத்து வரவேண்டும்?'' என்று கோம்பிளி பாட்டி சற்று நினைவு நன்றாக ஏற்படும்போதெல்லாம் கண்ணீர் விட்டுப் புலம்புகிறாள். திடீரென்று ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் ஊர்விட்டு ஊர் அலைந்து,கண்ட ஜலத்திலும் ஸ்நானம் செய்து ஏற்கெனவே சளி பிடித்திருந்ததாலும் கிழப்பிராணனாகையினால் தாளாமல் ஜுரம் வந்துவிட்டது. படுத்துப் புரளுகிறாள்.

நாராயணனும் இன்னும் சிலரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். நாராயணனுக்கு உண்மையில் மனம் தவிக்கும் தவிப்பில் தன் தாயார்மீது வெறுப்பும், மனக்கொதிப்புமே ஏற்பட்டன. கோம்பிளி பாட்டி படுத்திருந்த இடத்திற்கு வந்து "அம்மா! காசியாத்திரை எப்படி இருக்கிறது? புண்ணியம் ஏராளமாகக் கிடைத்துவிட்டதா!'' என்று கேட்டான்.

கோம்பிளிப்பாட்டி கண்ணீர் பெருகியவாறு "அப்பா! நாராயணா! வந்தயாப்பா? என் புத்தி கெட்டுப்போச்சு. ஊருடன் சேர்ந்து நான் கெட்டுப்போனேன். உன் வருத்தமறியாது நான் உன்னை மோசம் செய்துவிட்டேன். என் ப்ராணன் போவதற்குள் உன்னைப் பார்க்காது போய்விடப்போகிறேனே என்று தவித்தேன். நீ வந்தயாடா அப்பா! என்மேல் கோவிச்சிக்காதே! ஏதோ போராத காலத்துக்கு எனக்கு அப்படி பிடிவாத புத்தி தோன்றியது...சீதா, ...சந்திரா......எல்லாரும் சௌக்யமா!......என்று வருத்தத்துடன் கேட்டாள்.

நடந்துபோய்விட்ட காரியத்திற்கு இனி என்ன சொல்லித் தான் பயன் என்ன? சீதாவின் நிலைமையை அப்போது எடுத்துரைத்தால் கிழவிக்கு மனக் கொதிப்பு அதிகமாகும். ஆகையினால் அதையொன்றும் சொல்லாது எல்லோரும் சௌக்யந்தான் என்று கூறி

விட்டான். எப்படி கொள்ளை நடந்தது என்ற விஷயமாகவே எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். மீண்டும் அன்று மாலையில் கிளம்பும் ரயிலில் கோம்பிளி பாட்டியை அழைத்துக்கொண்டு நாராயணன் புறப்பட்டு மறுநாள் மாலையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

சந்திரா ஒவ்வொரு நிமிடமும் தன் பிதாவின் வரவை அதி ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். 'சுமார் ஒரு மாதத்திற்குக் குறையாமல் கட்டு கட்டி இருந்தால்தான் சப்பை சரியாகக் கூடும்; இல்லையேல் கால் ஊனந்தான் ஏற்பட்டுவிடும்' என்று சீதாவுக்கு வைத்தியர் கூறிவிட்டதால், தன் தாயாருக்கு புத்தி ஊனத்துடன் காலும் ஊனமாகாதிருக்கவேண்டுமே என்று சந்திராவுக்கு மிக்க பயமும் திகிலும் உண்டாகிவிட்டன.

182985

நாராயணன் கிழவியை அழைத்துக்கொண்டு வந்து சேர்ந்தான். கிழவி கிடக்கும் நிலைமையில் அவளைக் கண்ட சந்திராவின் திகில் பின்னும் அதிகரித்தது. சிறுமியாகையினால் 'கிழவியின் காலம் முடிந்துவிடுமோ!' என்ற பயம் பிடித்துக்கொண்டது: கிழவி சந்திராவைப் பார்த்ததும் விசனம் தாங்காது அழவாரம்பித்தாள். "சீதா எங்கேடியம்மா! அவளை கூப்பிடுடியம்மா!" என்று கேட்டாள்.

தன் பிதா வீட்டு விஷயங்களைக் கிழவியினிடத்தில் கூறவில்லை என்பதைத் தெரிந்துகொண்டாள். இச் சமயம் இதைச் சொல்வது பிசகென்று அறியாத சிறுமியாகையினால் கிழவி சென்ற பிறகு வீட்டில் நடந்த சகல விஷயங்களையும் ஒன்றுவிடாது கூறி "பாட்டீ! விசனிக்காதே! அப்பாவை கடவுள் சோதிக்கிறார். அவைகளை அனுபவித்துத்தானே தீரவேண்டும். உன் வாயைப் போல அம்மா வாய் ஆய்விட்டது. பல்லுபோனால் போகிறது. கால் கூடிவந்தால் போதும் என்று இரவு பகலாகக் கவலையாகவிருக்கிறது. அத்தைக்குக் கோபம் அபாரமாக வந்திருக்கிறது. அப்பா என்னதான் செய்வார் பாவம்!" என்றாள்.

கிழவிக்கு முதலில் தான் பிடிவாதம் செய்கையில் அத்தனை தெரியவில்லை என்றாலும் இப்போது இச்சம்பவங்களைக் கேட்கக் கிழவியின் மனக் கொதிப்பும் விசனமும் அதிகரித்துவிட்டன. தன்

மகனுக்கு ஓரே சமயத்தில் இத்தனை ஆபத்துக்களும் சூழ்ந்து வாட்டி விட்டனவே! என்ற துக்கம் பொங்கிப் பொங்கி வருகிறது. பேசவும் முடியவில்லை. தத்தளிக்கின்றாள் பாவம். பணம் எல்லாம் நாலா பக்கமும் சூறைபோன பிறகு இனி வருந்தித்தான் என்ன பயன். பெத்த தாயாரே இவ்விதம் செய்துவிட்டாளே என்று தன் மகன் எண்ணி விசனிக்கிறானே! பணம் இருந்தாலும் கல்யாணமாவது செய்திருக்கலாம். அதுவும் இல்லை. பணமும் போய்விட்டது. இனி அவன் எவ்விதந்தான் சமாளிப்பான்?'' என்ற ஏக்கம் கிழவியைப் பிடித்துக்கொண்டது.

நாராயணன் தன் தலைவிதி என்று பேசாமலிருந்துவிட்டான். தாயாரையும் நோகவில்லை; மனைவியையும் கடிந்துகொள்ளவில்லை. அவனுடைய நிலைமை உண்மையிலேயே பித்துபிடித்தவன்போல ஆகிவிட்டது. நாராயணன் ஊருக்குச் சென்றிருக்கையில் சந்திராவின் அத்தை இங்கு வந்தாள். கல்யாணத்திற்கு ஊரழைப்பதற்குப் போகவேண்டுமென்றும் அதற்கு சங்கிலி சற்று வேண்டுமென்றும் சந்திராவின் சங்கிலியைப் பங்கஜம் கேட்டாள். சீதா ஆஸ்பத்திரியிலிருப்பதால் சந்திராவே சங்கிலியைப் போட்டுக்கொண்டிருந்தாள். அத்தை கேட்பதால் சந்திரா கழட்டிக் கொடுத்தாள். பங்கஜம் ஊரழைத்துவிட்டு சங்கிலியைத் திருப்பித் தராமல் கல்யாணத்திற்கு வரும்போது அங்கு கொடுப்பதாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள்.

இந்த செய்கையின் சூது சந்திராவுக்குத் தெரியாது; எனினும் தன் பிதாவிடம் இதை எப்படிக் கூறுவது என்று பயந்து தியங்கினாள். சமயம் பார்த்துச் சொல்ல நினைத்தாள். அதற்குள்ளேயே பங்கஜத்தினிடமிருந்து கடிதம் வந்துவிட்டது. நாராயணன் அதைப் படிக்க வாரம்பித்தான்.

“அன்புள்ள அண்ணாவுக்கு!

நீ ஊரிலில்லாத சமயம் நான் அங்கு வந்ததை சந்திரா உனக்குக் கூறியிருப்பாள். அம்மாவுக்கும் மன்னிக்கும் உடம்பு குணமாயிருக்குமென்று நம்புகிறேன். மன்னியும் அம்மாவும் படுத்துவிட்ட இச் சமயத்தில் நீ எங்கு வர முடியப்போகிறது?

அதோடு செலவும் அதிகம். நமது துரதிருஷ்டம் கொள்ளையும் போய்விட்டது. பந்தல் மூளியாகாமலும், நமது கவுரவமும் மதிப்பும் குறையாமலும் இருப்பதற்காக நான் சந்திராவின் சங்கிலியை வாங்கிக்கொண்டுவந்து விற்றேன். அதில் மிகவும் குறைவாக 125 ரூபாய்தான் வந்தது. அதற்கு நான் முன் கடி தத்தில் தெரிவித்தபடி சுமாராக சீர்வகைகள் வாங்கிவிட்டேன். முடிந்தால் நீ கட்டாயம் வா; இல்லாவிட்டால் உன் பெயரால் ஆசீர்வாதம் நடத்திவிடுகிறேன். மன்னியையும் அம்மாவையும் நான் கேட்டதாகச் சொல்லு. அவர்கள் தேக நிலையைப்பற்றி அடிக்கடி எழுது. இந்த சமயம் நீ கஷ்டப்படுகையில் அதிகமாக சிரமம் கொடுக்காமலிருக்கும் பொருட்டு உனக்கு சௌகரியமே செய்தேன்.

இங்ஙனம்
உன் சகோதரி
பங்கஜம்.''

எரியும் அக்கினியில் எண்ணெயை வார்த்தது போல இந்த கடிதம் நாராயணனின் மனக் கொதிப்பைக் கிளறிவிட்டது. தன் னுயிரை எப்படியாவது மாய்த்துக்கொண்டு விடுவதே சரி என்ற துணிபும் உண்டாகிவிட்டது. அடுத்த நிமிடம் தன் குழந்தைகளின் முகங்கள் கண்ணெதிரில் தோன்றி கலக்குகின்றன. என்ன செய்வான் பாவம்! "உலகமே உன் லீலை இப்படியா இருக்கிறது? குழந்தை யினிடம் உள்ள சங்கிலியை மோசமாக வாங்கிச் சென்ற தைரியத்தை என்னென்பது? உம். சோதனை......

எந்த விதமாகவாவது தங்கள் காரியத்தை சாதித்துவிட்டால் போதும் என்ற மனப்பான்மையிலேயே உலகம் நடக்கிறது. என் வருத்தம் யாருக்கும் தெரியாதவாறு மனம் கல்லாயிருக்கின்றதுவும் என் பாபந்தான்.'' என்று விசனித்துக் கொண்டிருக்கையில் சந்திரா கடிதம் வந்த தகவலை யறிந்துகொண்டு திகிலும் பயமும் உண்டாகி நடுங்கிக்கொண்டே தந்தையின் முன்பு வந்து'' அப்பா! இம்மாதிரி செய்வதற்குக் கேட்கிறாள் என்று எனக்குத் தெரியாது. ஊரழைப் பதற்கு வேண்டு மென்று கேட்டதால் கொடுத்தேன். கடைசியில்

இப்படியா எழுதிவிட்டாள்...அப்பா!என்னை மன்னிக்க வேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

நாராயணன் விசனித்தபடியே ''சந்திரா!நீ ஏனம்மா கண்ணீர் விடுகிறாய்! நான் செய்த பாவத்தினால் எல்லாம் இப்படி நடக்கிறது. பணமிருந்தால், சீர்கள் செய்தால் மனிதன்; இல்லையேல் மிருகத்திற்குச் சமமாகத்தான் மதிப்பார்கள். இம் மட்டும் நேரில் கேட்டு வாங்கிச் சென்றாளே! நீ தூங்கும்போது கழட்டிக்கொண்டு போய் விட்டு களவுபோய்விட்டது என்று கூறி இதையும் அமுக்கிவிட்டு இன்னமும் கேட்காது இருக்கிறாளே அதுவே நமக்கு நல்ல காலம் என்று நினைக்கவேண்டும்.

உலகத்தில் இத்தகைய மனுஷியும் இருக்கிறாள் என்பது தெரிகிறது. உடன் பிறந்த அண்ணன் அலங்கோலமாகக் கஷ்டப்படுகிறான் என்றால் தன்னாலான சகாயத்தைச் செய்து உதவி புரியவும், எங்காவது வரனைத்தேடி விவாகத்தைச் செய்ய முன்னே வரவும் இல்லாது, நம்மையே அடித்துப் பிடுங்கித் தின்னும் பேயாக அமைந்துள்ளது நாம் செய்த கர்மம்...உம்...இன்னும் எந்தெந்த வழியில் தான் சோதனை செய்கிறாரோ செய்யட்டும். கிழவியின் நிலைமையைப் பார்த்தால் அவளும் இறந்து அந்த பெருஞ் செலவும் இப்போதே வைப்பாள் என்று தெரிகிறது. வருவதெல்லாம் வரட்டும்.'' என்று மிக்க சலிப்புடனும், வெறுப்புடனும் கூறினான். சந்திரா என்ன செய்வாள் பாவம்! தந்தையின் பரிதாபம் அவள் மனத்தை உருக்கியது. எந்த வகையில்தான் அவரைத் தேற்ற முடியும்?

கிழவிக்கு உடம்பு குணமாகும் வழியைக் காணவில்லை. காசி யாத்திரையின் பலன் வைகுண்ட யாத்திரைக்கே வழி காட்டிவிட்டது போல கிழவியின் நிலைமை கேவலமாகிக்கொண்டே வந்து 10 தினங்களுக்குள்ளேயே வாயைப் பிளந்துவிட்டாள். ஆஸ்பத்திரியிலிருக்கும் சீதா வீட்டிற்கு வரும் வழியைக் காணவில்லை. கிழவி முதலில் கை வைத்தது போதாமல் அதற்கு வட்டியாக தன் சாவுச் செலவையும் ஒன்றாக வைத்துவிட்டாள். கையில் காலணா இல்லாத நாராயணன் எவ்விதம் தன் தாயின் கருமாதிகளை முடிப்பான்?

தாயார் இறந்துவிட்ட விசனத்தை விட ஆயிரம் பங்கு பணக் கஷ்டத்தின் சங்கடம் பாதித்து அவனை வாட்டி வதைக்கின்றது.

நாராயணனின் ஆப்த சினேகிதன் அநந்தனின் உதவியினால் முதல் நாளைய காரியத்தை யொருவாறு முடித்தான். அதற்குமேல் எந்த வகையில் எப்படி கடன் வாங்குவது என்று திண்டாடிக் கொண்டிருக்கையில் முனிசிபாலிட்டியார் வந்து "இந்த வீட்டின் பின்புறம் நிரம்பவும் கிலமாகவும் தலைமேல் விழுந்துவிடும் போலவும் இருப்பதால் உடனே அதை ரிப்பேர் செய்யவேண்டும் இல்லையேல் நாங்கள் இடித்துத் தள்ளிவிடுவோம். இது ஆபத்துக்கரமானது" என்று கூறிவிட்டார்கள். நாராயணனின் நிலைமை எப்படித்தானிருக்கும்? சோதனை என்றால் இப்படியுமா வரும்? இதைக்கேட்டதும் தன்னையே மறந்து அலறினன் திடுக்கிட்டு நடுங்கி நடைச் சவம்போலானன்.

12-வது அதிகாரம்

மோடா விழுங்கி ஆசாமிக்கு ஊர் விழுங்கி துணை

பூசை வேளையில் கரடி புகுந்தது போல திடீரென்று ஒரு இரவு காலத்தில் பத்மநாபனின் தந்தை தடதட வென்று கதவை இடித்ததானது அங்குள்ள எல்லோரையும் ஒரு ஆட்டு ஆட்டிவிட்டது. பத்மநாபனுக்கும் ஜானகிக்கும் தலைமேல் இடி இடித்ததுபோலாகிவிட்டது. ஒருவரையொருவர் பார்த்து நடுநடுங்கித் தவிக்கிறார்கள். "கண்மணீ! ஜானகீ! சற்று முன்னர் நீ பயந்ததற்குத் தக்கவாறு என் பிதாவே வந்துவிட்டாரே! நாம் இப்பொழுது என்ன செய்வது?" என்று உடல் நடுங்கக் கேட்டான்.

ஜானகி "என்ன! என்ன! தங்கள் தந்தையா! உண்மையில் உங்கள் பிதாவா! ஹா! இதென்ன சோதனை! இப்போது நான் என்ன

செய்வது? எனது பாட்டியாரும் இங்கு வந்திருக்கிறார்களே! இவருடைய குரலைக் கேட்டதும் தெரிந்துகொண்டு அவளுக்குள்ள ஆத்திரத்தில், வயிற்றெரிச்சலில் அவள் வாயில் வந்தபடி எல்லாம் திட்டவாரம்பித்து விடுவாளே! நம்முடைய குட்டும் வெளியாகி விடுமே! நம்மால் அவ் விருவருக்குமன்றோ பெருத்த தரும சங்கடமாகி விட்டது......

நாதா!...நாதா!...நான் என்ன செய்வேன்? சந்தோஷத்தைக் காட்டுவதைப் போலக் காட்டி உடனே சங்கடத்தில் கொண்டு விட்டுக் கடவுள் சோதிக்கின்றாரே! ஐயோ! அவர் பலமாகக் கதவை இடித்துக் கூவுகிறாரே!...நமது ரகஸியத்தைத் தெரிந்துகொண்டு நம்மை என்றுமே இனி சந்திக்கவிடாதபடிச் செய்து விடுவாரோ! என்ன செய்வேன்?...என்று தாமரையிலைத் தண்ணீர் போல தத்தளிக்கின்றாள்.

ரங்கநாதனோ என்ன விதமாக இந்த சிக்கலிலிருந்து தப்புவது என்று பெருங் குழப்பத்தில் மூழ்கிவிட்டான். பின்கட்டில் படுத்திருக்கும் கிழவி "அம்மா! சுகந்தம்! ஜானகி! யாரோ கதவை இடிக்கிறார்கள் பாருங்கள். நீங்கள் திறக்கிறீர்களா! நான் திறக்கட்டுமா! கண்ணைத் திறக்க முடியவில்லை. எழுந்திருங்களம்மா!'' என்று கத்துகிறாள். நாய்களோ புதிய குரலைக் கேட்டதும் ஓயாது குரைக்கின்றன.

கிழவியின் குரலைக் கேட்டதும் மற்ற எல்லோருக்கும் பின்னும் கலக்கமும் திகிலும் பிடித்துக்கொண்டன. கிழவி எங்கே தட்டு தடுமாறிக்கொண்டு எழுந்து வந்து கதவைத் திறந்துவிடுவாளோ! என்ற பயம் அதிகரித்து விட்டதால் சுகந்தா கிழவியிடம்ஓடி "பாட்டி! நாங்கள் விழித்துக் கொண்டோம். நாங்கள் போய் திறக்கிறோம். நீங்கள் படுத்துக்கொண்டிருங்கள்.'' என்று கூறினாள்.

ஜானகியும் பத்மநாபனும் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து வெளியில் வந்தார்கள். பத்மநாபன் திகிலுடன் "ரங்கநாதா! என்ன பண்ணுவது? இப்படி திடீரென்று ஒருவரும் எதிர்பாராத

விதம் இங்கு இவர் எதற்காக எப்படி வந்தாரோ தெரியவில்லையே! மன்னி! நீங்கள்தான் சமயோசிதம்போல நடிக்கவேண்டும். வந்திருப்பவர் என் பிதாவென்பது தெரியுமல்லவா!......ஜானகி! கண்ணீர் விடாதே! கலங்கிக் கவலைப்படாதே! இதுவும் ஒரு சோதனை என்று மனந்தேறு. இதனால் ஒன்றும் முழுகிப்போகவில்லை. கடவுள் காப்பாற்றுவார். நான் உன்னை இனி என்னுயுள்பரியந்தம் கைவிடமாட்டேன்'' என்று கண்டிப்பாயும், அன்பாயும் கூறித் தேற்றினான்.

உண்மையில் பத்மநாபனின் தகப்பனார் கதவிடிப்பதாக சுகந்தாவுக்கு தெரியாதாகையினால் அவள் "என்ன! என்ன! உங்கள் பிதாவா! ...அடாடா! அவர் எதற்காக இப்போது வந்தார்...சரி! சரி! வீணாக நேரம் கடத்துவது விகாரமாகிவிடும். நீங்கள் இருவரும் உள்ளே செல்லுங்கள். நாதா! தாங்களும் போய் படுத்துக்கொள்ளுங்கள். யாரும் மூச்சுக்கூட விடவேண்டாம்....நான் போய் பதில் சொல்லுகிறேன்'' என்று கூறிவிட்டு நாய்களைக் குரைக்காமல் தட்டிக்கொடுத்துப் பின் மனத்தில் திகிலும் பயமும் பாதித்தவாறு, "யாரது...... இருங்கள். இருங்கள்''...என்று கூறியபடியே கதவைத் திறந்தாள்.

வீதியில் ஆகாயத்திற்கும் பூமிக்குமாக வளர்ந்து பர்வதம்போல நிற்கும் மனிதனைப் பார்த்து சுகந்தா ஒன்றுமறியாதவளைப்போல "தாங்கள் யார்?'' என்ன வேண்டும்? என்று கேட்டாள். சுதர்சனமும் சுகந்தாவை அதிகம் பார்த்துப் பழக்கமில்லை எனினும் அவள்தான் ரங்கனின் மனைவி என்பதை யறிந்துகொண்டான்.'' ஏனம்மா! நான் நான் சுதர்சனம்...ரங்கநாதன் எங்கே! தூங்கிவிட்டானா? அவனைப் பார்க்கத்தான் வந்தேன்....என் குமாரன் பத்மநாபன் சென்ற பத்து தினங்களாக இங்கு இருக்கிறானல்லவா!...என்றதும் சுகந்தா வெகு சுறுசுறுப்பாயும், ஆச்சரியத்துடனும் பேசத்தொடங்கி! "ஓகோ! தாங்கள் பத்மநாபரின் பிதாவா!...சந்தோஷம்...நான் யாரோ என்று எண்ணினேன்.... அவர் ஊரிலில்லையே! நேற்றுதான் வெளியூருக்குப் போயிருக்கிறார்......என்று இழுத்தார்ப்போலக் கூறினாள்.

சுதர்:—அப்டியா! ஊரிலில்லையா! பையன் எங்கே! அவன் தூங்குகிறானே!

சுகந் :—இல்லை! இல்லை! இருவருந்தான் வெளியூருக்குச் சென்றிருக்கிறார்கள். அயலாரிடம் விஷயத்தைத் தெரிவிக்கவேண்டாமென்று கூறினார்கள்...ஆனால் நீங்கள் அதில் சம்மந்தப்பட்டவர்கள்தானே! உங்களுக்குத் தெரிவித்தால் என்ன...அடுத்த 15 மைலில் குமாரபுரம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே ஒரு பெரிய மனிதருக்கு 16 வயதில் பெரிய பெண் இருக்கிறதாம்...என் கணவருக்குத் தெரிந்த யாரோ ஒருவர் சொன்னாராம். தாங்கள் என்னவோ குமாரருக்கு மறு விவாகம் செய்யவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறீர்களாமே....

சுதர் :—'கட்டுமீறிய ஆத்திரமும் சந்தோஷமும் பொங்கியவாறு ...திண்ணைமீது உட்கார்ந்து'...ஆ......ஆமாம்......நம் பையனுக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கச் சென்றிருக்கிறார்களா!...மிக்க சந்தோஷம்......

சுகந் :—ஆமாம். பெண் மிகவும் அழகாக இருக்கிறதாம். பாட்டு, படிப்பு முதலியவைகளில் தேர்ச்சி பெற்றவளாம்......

சுதர் :—ஊம்....வரதக்ஷிணை எம்மட்டும்....சீர் வகைகள் எம்மட்டும்......விவரமாகக் கூறம்மா! நானும் ஒரு பெண் விஷயமாகத்தான் வந்தேன். நீ நிற்கிறாயே!...நான் உன் பிதா மாதிரியானவன்.... இப்படி திண்ணையிலேயே உட்காரு......

சுகந் :—பரவாயில்லை. நிற்பதால் என்ன கெட்டுவிடுகிறது... வரதக்ஷிணை இல்லாமலா! சீர் வகைகள் இல்லாமலா...வேண்டியது ஏராளமாக உண்டாம்...பெண்ணுக்கு சுமார் 10 ஆயிரம் ரூபாயிக்கு வைர நகைகளே போட்டிருக்கிறார்களாம். ஒரே பெண்தானும். வேறு பிள்ளையோ பெண்ணோ கிடையாதாம்...ஆனால் பெண்மட்டும் சற்று கருப்புதானும்...

சுதர் :—ஆமாம்...கருப்பு, சோப்பு...எப்படி இருந்தால் என்ன ...குடும்ப ஸ்திரீகளுக்கு அழகென்ன...அழகாக ஒரு பிணத்தை முதலில் கட்டினேமே!...தரித்திர மூதேவி...அந்த சனியன் என்ன குப்பை கொட்டியது. அந்த பீடையின் வார்த்தையே இப்போது வேண்டாம்...ஊம்...இன்னும் என்ன செய்கிறார்களாம்...என்றார்.

அவர் உட்கார்ந்திருக்கும் திண்ணைக்குப் பின்புறமுள்ள ஜன்னலால் பத்மநாபனும் ஜானகியும் இந்த சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டே நிற்கிறார்கள். ஜானகியைப்பற்றிக் கூறும்போது அவள் மனத்தில் குத்துகிறது. பக்கத்திலேயே தன் ப்ராணவல்லபன் நிற்பதால் அவனைத் தழுவிக்கொண்டு மனச்சாந்தி யடைகிறாள். சுகந்தவல்லியின் சமயோசித புத்தியின் விசாலத்தைக் கண்டு எல்லோரும் சந்தோஷமடைந்து மீண்டும் என்ன நடக்கின்றது என்பதைப்பற்றிக் கவனிக்கலானார்கள்.

சுகந் :—ஆமாம்! மனத்திற்குப் பிடிக்காவிட்டால் அப்படித்தானிருக்கும். அது கிடக்கட்டும். பெண்ணுக்கு சித்தப்பா. பெரியப்பா

இருவருக்கும் குழந்தைகளே இல்லையாம். எல்லோருடைய சொத்தும் சுமார் ஒரு லக்ஷம் வரையில் இந்த பெண்ணுக்குத் தான் சேருமாம். கல்யாண சமயத்தில் 20 ஆயிர ரூபாயிக்கு சீர் வகைகள் செய்கிறார்களாம். பூதானமாக முதல்தரமான நிலங்கள் சுமார் 20 ஆயிரம் வரையில் பிள்ளைபேருக்கே எழுதி வைக்கிறார்களாம். வரதக்ஷிணையாக 10 ஆயிரம் ரொக்கமும், ஒரு மோட்டாரும் கொடுக்கிறார்களாம். ஒரே பெண்ணாகையினால் மருமகப்பிள்ளையை அவர்களிடமே வைத்துக்கொள்ள ப்ரியப்படுகிறார்களாம். மற்றபடி எத்தனையோ செய்வார்கள். ஜாதகம் கேட்டிருக்கிறார்களாம்.

சுந்:—அம்மா! எனக்குள்ள சந்தோஷத்திற்கு அளவே இல்லை சினேகிதனென்றால் இப்படித்தானிருக்கவேண்டும். ஜாதகத்தைக் கொடுத்துவிட்டார்களோ!......இத்தனை லக்ஷணங்களுடன் உள்ள பெண்ணை எப்படியாவது முடித்துவிடவேண்டும்...பெண்ணின் ஜாதகத்தை முதலில் நாம் வாங்கிக்கொண்டால் அதற்குத் தகுந்தாற் போல பையனின் ஜாதகத்தை மாற்றிவிடலாம். கல்யாணமென்றால் இலேசானதா! ஆயிரம் பொய் சொல்லி ஒரு தாலி கட்டு என்பது பழமொழியல்லவா! உண்மையான ஜாதகத்தைக் கொடுத்துவிட்டால் அது ஒருக்கால் சரி இல்லை என்றால் என்ன செய்வது?

சுகந்:—அடாடா! என் கணவருக்கு அவ்வளவு தெரியாதா! என்னையே கல்யாணம் செய்துகொள்வதற்காக என் ஜாதகத்திற்குச் சரியாக தன் ஜாதகத்தைத் தானே சென்று ஜோஸியரிடம் மாற்றிக் கொண்டு வந்துவிட்டாராம். அவருக்கா சொல்லவேண்டும். ஜாதகத்தைக் கேட்டதற்கு நாங்கள் ஜாதகமே பார்ப்பது வழக்கமில்லை. கோயிலில் புஷ்பம் வைத்து சகுனம் பார்க்கலாம் என்று சொல்லி விட்டாராம்.

சுந்:—ஐயோ! அதுவும் அவர்கள் எதிரில் பார்க்கவேண்டுமென்றால் என்ன செய்வது?

சுகந்:—இரண்டு புஷ்பங்களும் வேறுவேறாக இருந்தால் தானே கஷ்டம். ஒரே புஷ்பத்தை இரண்டு செண்டாகக் கட்டிவிட்டால் வெகு எளிதில் ஏமாற்றிவிடலாமே!...அதற்காகத்தான் அப்ப

டிச் சொல்லி இருக்கிறார். அங்கு சென்று பெண்ணைப் பார்த்து விட்டு சகலத்தையும் பேசித் தெரிந்துகொண்டு வரும்பொருட்டே போயிருக்கிறார்கள்.

சுதர் :—அந்தப் பயலுக்கு நாங்கள் மூன்று வருடங்களாக எத்தனையோ சொல்லியும் மறு விவாகத்திற்கு மறுத்துக்கொண்டே வந்தான். சில சமயம் சண்டையும் போடுவான். நல்ல காலத்திற்குத்தான் ரங்கன் அங்கு வந்து அழைத்துவந்தான். அந்த கிறுக்குப் பிடித்த தடியன் சம்மந்தி...தரித்திரக் கழுதைகள்—அவர்கள் முகத்திலடித்ததுபோல மறுவிவாகத்தைச் செய்து அந்தப் பெண்ணையும் அந்த வேணுவையும் வயிறெரியச் செய்யவேண்டாமா! நானும் இப்போது கல்யாண விஷயமாகத்தான் வந்தேன். இந்த ஊரில் ஒரு பெண் இருக்கிறதாம். அதற்கும் நிறைய வரதக்ஷிணை கொடுப்பதாயும் சீர்வகைகள் செய்வதாயும் சொல்கிறார்கள். பையன் இங்கேயே இருக்கிறானே! இப்படியே அவனையும் அழைத்துச் சென்று காட்டிவிட்டு நிச்சயமும் செய்துகொண்டு போகலாமென்று நானும் அவளும் வந்தோம் மத்தியில் வண்டி ஏதோ தகராறு. ஆனதால் தாமதமாகிவிட்டது. அதனால்தான் இரவு இத்தனை நேரம் அகாலமாயிற்று. அவளை அங்கொரு தெரிந்தவர்கள் வீட்டில் விட்டு விட்டு நான்மட்டும் இங்கு வந்தேன்......சரி! வந்தது மிகவும் நல்லதாகிவிட்டது. அவர்கள் எப்போது வருவார்கள். என்ன சொல்லி விட்டுச் சென்றார்கள்?

சுகந் :—மாமிகூட வந்திருக்கிறார்களா! தாங்கள் சாப்பிட்டாயிற்றோ!...இங்கொரு பெண் இருப்பதாகத் தெரிவித்தீர்களே! அதைப் பார்க்கப்போவதில்லையா! அதை விட இந்தப்பெண் அழகாக இருக்குமாயின் பார்க்கலாமே!

சுதர் : — அழகென்னம்மா வேண்டியிருக்கு? நான்தான் முதலிலேயே தெரிவித்தேனே! அழகும் வேண்டாம். மண்ணுங்கட்டியும் வேண்டாம். நமக்கு முக்கியமானது பணந்தான். கல்யாணத்தை எப்படியும் கட்டாயம் பண்ணியே தீரவேண்டும். சரியானபடி வரதக்ஷிணையோ சீர் வகைகளோ கொடுத்துவிட்டால் போதும். பையனுக்கு அத்தனை அழகைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அம்மா!

நீ எங்க மனிஷியாகிவிட்டாய். உன்னிடம் சொல்வதற்கென்ன ரகஸியமா?

எனது ஆப்த நண்பன் ஒருவனுக்காக நான் அவனை நம்பி சுமார் 20 ஆயிரம் ரூபாயிக்கு கூட்டு வியாபாரம் நடத்தினேன். அவன் என்னை ஏமாற்றி மோசம் செய்துவிட்டதால் வியாபாரம் முற்றும் நஷ்டமாகி விட்டது. என் பாகத்திய ரூபாயும் போய்விட்டது; அவன் பாகத்துக் கடனுக்கும் நான்தான் ஜவாப்தாரி என்று என் தலையில் வந்து வடிந்தது. இந்த நஷ்டம் எங்கள் குடும்பத்தையே பாதித்துவிட்டது. தரித்திர சம்மந்தம் ஒன்று செய்துவிட்டு நான் தடமாடிவிட்டேன். அப்பெண்ணைப் பற்றிய அவமானம் வெளியில் தலை காட்ட முடியவில்லை. ஊரில் யார் யாரோ இறக்கிறார்களே அந்த மூதேவிக்குச் சாவு வரக்கூடாதா!...எங்கள் மானத்தை வாங்க உயிருடனிருக்கிறது......போகட்டும் சனி.

நிலங்களில் விளைவுகளும் சாவியாகிவிட்டன. இதற்காகத்தான் நான் மிக்க கஷ்டப் படுகிறேன். எப்படியும் கல்யாணத்தைச் செய்து தீரவேண்டும். சரியான வரதக்ஷிணையுடன் விவாகத்தைச் செய்தால் கடனடைந்துவிடும். எனது இந்த உள் ரகஸியம் ஒருவருக்கும் தெரியாது. நீ எங்கள் மனிஷியாகையினால் சொன்னேன். அந்த பெண்ணை இதைவிட திடமாகவிருக்கிறது. ஆகையினால் அதையே நிச்சயம் செய்துவிடலாம். ஜாதகமோ சகுனமோ நாம் எதையும் வாய்விடக் கூடாது.

என் பெண்ணின் ஜாதகத்தைப் பார்த்தவர்கள் எல்லாம் இது வெறும் தரித்திர ஜாதகம் என்று இழிவாகக் கூறினார்கள். அதனால் அதை மாற்றி உயர்ந்த யோக ஜாதகமாக எழுதிவிட்டேன். அவளுக்கென்ன ஜோரா இருக்கிறாள். என் தம்பியின் ஜாதகப்படிக்கு அவனுக்கு முதல்தாரம் தவறிவிடும் என்று இருந்தது. எனது ஒன்று விட்ட தம்பி ஒருவனிருக்கிறான். அவனுக்கு மந்திரம், தந்திரம் ஜோசியம் முதலிய எல்லாம் தெரியும். அவனைக் கொண்டு ஜாதகத்தை மாற்றிவிட்டேன்.

ஜாதகத்தை மாற்றுவதற்கு முன்பு ஒருவரும் பெண் கொடுக்க

இசையவில்லை. மாற்றிய பிறகு ஆக்ஷேபனை யின்றிக் கொடுத்து விட்டார்கள். கல்யாணம் ஆகிய மறு வருடமே அந்த பெண் இறந்து விட்டது. இருந்தாலும் ஜாதகத்தின் மீது கோளாறில்லாது போய் விட்டது. இப்போது வேறு விவாகம் செய்துகொண்டிருக்கிறான். இதெல்லாம் செய்யவேண்டுவதுதான் முக்கியம். அவர்கள் என்ன செய்துகொண்டு வந்துவிடுகிறார்களோ என்று யோசனையாக விருக்கிறது.

சுகந்:—அடாடா! உங்களுடைய யோசனை யோசனை தூரம் சென்று அபாரமான வேலை செய்யக்கூடியதாக விருக்கிறதே! இம்மாதிரி சமயோசிதமான மதிதான் மிக்க அவசியமானது...... நன்றாக இல்லாத ஜாதகத்தை மாற்றுவதுபோல நன்றாயிருக்கும் ஜாதகத்தை நமக்கு வேண்டாதவர்களாயின் மாற்றிவிடுவதும் உண்டோ! —என்று வெகு தந்திரமாயும் நம்பும்படியாயும் கேட்டாள்.

சுதர்:—ஆகா! தாராளமாகச் செய்துவிடலாம். எங்களுக்கும் வேணு வீட்டாருக்கும் உள்ள மனஸ்தாபத்தின் பயனாக நான் என்ன செய்தேன் தெரியுமா! அவனுடைய இளைய பெண்ணின் ஜாதகமும், அவனுடைய ஷட்டகன் நாராயணன் இருக்கிறானே அவனுடைய மூத்த பெண்ணின் ஜாதகமும் எங்களுக்குள் சண்டை வருவதற்கு முன்பு என்னிடம் கொடுத்தார்கள். சண்டை வந்த பிறகு திருப்பிக் கேட்டார்கள். அதற்குள் அவ்விரண்டையும் மாற்றி விட்டதோடு, சிலரிடம் இக் கேவலமான ஜாதகத்தைக் கண்ணாலும் பார்க்காதீர்கள் என்று பரவ வைத்துவிட்டேன். இருவரும் இப்போது திண்டாடுகிறார்கள். ஜாதகம் எல்லாம் நம்பிக்கையில்தானே இருக்கிறது.

சுகந்:—அப்படியா! இவைகளைக் கேட்கக் கேட்கக் கதைபோல ஸ்வாரஸ்யமாக விருக்கிறது. பழிக்குப்பழி வாங்குவதில் இது ஓர் சிறந்த வழிபோல இருக்கிறது. உங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம். ஒரு மனிதரின்மேல் மனஸ்தாபமாயின் அவர்களைத் தலை தூக்காத விதம் செய்துவிட ஏதாவது வழியுண்டா! ஏனெனில் எங்களுக்குச் சில பகைவர்கள் இருக்கிறார்கள். அதற்காகக் கேட்கிறேன்.

சுந்தர் :—இதெல்லாம் என்ன ப்ரமாதம்! என் தம்பியிடம் தெரிவித்தால் மந்திரம் போட்டு என்ன வேண்டுமாயினும் செய்து விடுவான். இந்த கல்யாணத்தை முதலில் முடித்துவிடுங்கள். நான் அவனைக்கொண்டு உங்களுக்கு வேண்டியதைச் செய்யும்படியாக ஏற்பாடு செய்கிறேன். கல்யாண விஷயம் என்னவாகுமோவென்றே கவலையாக விருக்கிறது.

சுகந் :—இதில் கவலை என்னவிருக்கிறது. என்னுடைய கணவர் ப்ரவேசிக்கும் காரியத்திற்கு ஜெயமேயன்றி தோல்வி கிடைக்கவே கிடைக்காது. அவர் அந்தப் பெண்ணை உங்கள் பிள்ளைக்கு நேரில் காட்டி அப் பெண்ணையும் உங்கள் பிள்ளையையும் பேசவைத்து இருவர் மனமும் சம்மதப்பட்டு கட்டாயம் இனி தடையின்றி விவாகத்தை உடனேயே நடத்தித்தான் தீரவேண்டும் என்று கூறும்படியான நிலைமையைச் செய்துவிடமாட்டாரா! அந்தப் பெண்ணை மணக்காவிட்டால் இனி உயிர் போய்விடும் என்று உங்கள் பிள்ளையும், அதேபோல அப் பெண்ணும் தவிக்கமாட்டார்களா? அம்மாதிரி நிலைமை ஏற்பட்டால், தாமே விவாகத்தைச் செய்து விடுகிறார்கள். இதற்கு நாம் ஏன் பயப்படவேண்டும்? நாளையதினம் மத்தியானம் வருவாகள். நீங்கள் எந்த விலாசத்தில் இருக்கிறீர்கள் என்று தெரிந்தால் நான் சொல்லி யனுப்புகிறேன். இப்போது மிகவும் அகாலமாகிவிட்டது. தெருவில் பேசிக்கொண்டிருப்பது அழகல்ல.

சுந்தர் :—ஆமாம்! ஆமாம்! நானே நாளைய தினம் வருகிறேன். நான் சொல்லிய விஷயங்களைப் பற்றி நீ யாரிடமும் சொல்லாதே. நீயும் அவைகளைக் குற்றமாக எடுத்துக்கொள்ளாதே!...நான் சென்று நாளை வருகிறேன். இந்த காரியம் எப்படியும் உங்களால்தான் நடக்க வேண்டும்—என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.

நமது சுகந்தவல்லிக்கு இம் மனிதர் கூறிய விஷயங்களைக் கேட்கக் கேட்க அளவுகடந்த ஆச்சரியமும், திகைப்பும் உண்டாயின. "இப்படியும் ஓர் கிராதக மனிதன் உலகத்திலிருக்கிறானே!...அடடா! கொலைக்கும் அஞ்சாத பாதகர்கள் இவர்களேயன்றி வேறல்ல. என்ன நெஞ்சு துணிபு...என்ன கருமித்தனம்!''...என்று வியந்தவாறு கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள்.

இவைகளைக் கேட்டுக்கொண்டு உள்ளே இருக்கும் தம்பதிகளுக்கோ கூறத் திறமற்ற ஆச்சரியமும், அம்மனிதர் கூறிய கொடிய வார்த்தைகளால் அபாரமான ஆத்திரமும் ஒன்று கூடி அவர்களைக் கப்பிக்கொண்டன. சுகந்தாவின் மதி யூகத்திற்கு வியந்து மனம் பூரித்தார்கள். ஜானகிக்கு தன் மீது அவர்கள் கொண்டுள்ள சீற்றத்தையும் மனமாற்றத்தையுங் காண தன் பிற்கால வாழ்க்கை எவ்விதமாக முடியுமோ என்கிற திகில் ஒருபுறம் பாதிக்கின்றது.

ஜானகியின் மனத்துயரத்தை யறிந்து பத்மநாபன் அவளைத் தேற்றி சமாதானங் கூறி "கண்மணீ! இனி யாருடைய வெறுப்பும் விருப்பும் நம்மை ஏதும் செய்துவிட முடியாது; இது சத்தியம். ஆனால் விரைவில் நாம் ஒன்றாக இருக்கமுடியாதிருக்கின்றதே! அதற்காகத்தான் விசனப்படுகிறேன். நீ சற்று பொறுமையாக இன்னுமுள்ள சில நாட்களையும் கழித்துவிடு. பிறகு நாம் என்றும் பிரியாது சந்தோஷமாக விருக்கலாம். அதைரியப்படாதே!" என்று வெகு கனிகரத்துடனும் பக்ஷமாயும் தேற்றினான்.

என்ன தேறுதல் கூறியும் ஜானகியின் மனம் மட்டும் சற்றும் நிம்மதி என்பதே கொள்ளாமல் தன் மாமனார் கூறிய அதி கடூரமான வார்த்தைகளினாலேயே திகில் பிடித்து அதே ஏக்கமும் அவளையறியாத ஒருவிதமான அதிர்ச்சியும் உண்டாகி தவிக்கிறது. பின்புறம் படுத்திருக்கும் பாட்டி இதை அறிந்துவிடப்போகிறாளே என்கிற பயமும் வாட்டுகிறது.

சுகந்தவல்லி சற்றும் முன்பின் யோசியாமலும் தியங்காமலும் சுதர்சனத்திற்குப் பதில் கூறி அவரை ஏமாற்றிவிட்ட ஆச்சரியம் ரங்கநாதனுக்குக் கூற முடியவில்லை. சுகந்தவல்லியைத் தட்டிக் கொடுத்தவாறு "சுகந்தம்! இவ்வேளைக்குத் தக்கபடி சாமர்த்தியமாகவும் அம்மனிதனே மலைக்கும் வண்ணமாயும் வெகு வியப்பாக நடித்துக், காப்பாற்றிவிட்டாய்! ஆனால் நாளைக்கு எங்களை அகப்பட்டுக் கொள்ள வைத்துவிட்டாயே! இதற்கென்ன செய்வது?

சுகந்தா! பணப்பேய் பிடித்து எந்த பெண்வீட்டாரைக் கொள்ளையடிக்கலாம் என்று காத்துக்கொண்டிருக்கும் அம் மனித

னுக்கு இரவு முற்றும் தூக்கமே பிடிக்காது; புரண்டு தவித்துக் காலை யில் எழுந்து வந்துவிட்டால் என்ன செய்வது? அதற்கும் ஓர் யோசனை இப்போதே சொல்லிவிடு. பிறகு விழிக்கவேண்டாம்.'' என்றான்.

இதற்குள் பத்மநாபன் "என்னடா! நீ அதற்குமேல் அவசரப் படுகிறாய்? இந்த சமயம் இம்மாதிரி தோன்றிய புத்திக்கு இதற் குப் பரிகாரம் தோன்றாமலும் சொல்லாமலும் நம்மைக் காட்டியா கொடுத்துவிடுவார்கள்! அதில்லை. பாரு; கட்டாயம் சொல்வார்கள். என்னால் உங்கள் இருவருக்கும் எத்தனை தொல்லை பாருங்கள். ஜானகி!...நீ ஏன் கவலைப்படுகிறாய்? விரன் மந்திரி மதியும் என்கிற படி நமது மதனியார் இருக்கையில் உனக்கென்ன குறைவு? அவ ருடைய தந்திரமே நம்மைக் காப்பாற்றும்'' என்று சந்தோஷத்துடன் கூறினான்.

வெகு சந்தோஷமாயும் வணக்கமாயும் சுகந்தா நகைத்துக் கொண்டே "சரி! சரி! எல்லோரும் சேர்ந்து என்னைத் தோத்திரம் செய்யவேண்டாம். எல்லாம் ஈசன் செயல். அவன் எந்த சமயமும் சமயோசித புத்தியைக் கொடுத்துக் காப்பாற்றிக்கொண்டேதானிருப் பான். ஆகையினால் பயப்படவேண்டாம். எல்லோரும் படுத்துக் கொள்வோம். இரவு நிர்ப்பயமாயும் நிர்மலமாயும் சந்தோஷமாயும் கழியட்டும். இப்போதிலிருந்து அந்த விசாரத்தைப் படவேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

ஜானகி! பயப்படாதே. உண்மைக்கும் சத்தியத்திற்கும் என் றுமே அழிவென்பது கிடையாது. உண்மைக்கு என்றும் ஜேயம் உண்டு. நீதிக்கும் தருமத்திற்கும் என்றும் கடவுள் கை கோடுப்பான். கடவுள் ஒருவன் உண்டு என்பதையும் அவன் எந்த நேரமும் எல் லோரையும் பார்த்துக்கொண்டே இருக்கிறான் என்பதையும் மனப் பூர்வமாக நம்பு. நாம் இம்மையில் இல்லை எனினும் போன ஜென் மாவில் செய்த கர்மத்தினால் இந்த ஜென்மாவில் அனுபவிக்க நேரு வது சகஜம். உனக்கு அக் கஷ்டமும் நீங்கிவிட்டதாகவே எண்ணு. கடவுளை நம்பு...கலங்காதே!...என்று தேறுதல் கூறி எல்லோரை யும் அனுப்பினாள்.

பத்மநாபனும் ஜானகியும் மீண்டும் உள்ளே சென்றார்கள். ரங்கநாதனும் படுக்கச் சென்றான். இவைகளெல்லாம் பத்து நிமிடத்திற்குள் நடந்தன. சுகந்தா மறுநாள் எந்த விதமான தந்திரம் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே படுத்திருந்தாள்.

பின்னும் பத்து நிமிடத்திற்கெல்லாம் பெருமாள் பெரிய பெருமாள் ஆகிய கதையைப்போல சுதர்சனத்துடன் சண்பகம்மாளும் ஒரு பெட்டியை இடுப்பில் வைத்துக்கொண்டு "அப்பாடா! இந்த வீடுதானா! ரங்கனும் அவளும்படையாளும் நன்றாக இருக்கணும்... முதலிலேயே இங்கே வராமல் போனோமே! பாதி ராத்திரியில் பிசாசு போல நடந்து வந்தோமே! அம்மா! சுகந்தம்!...சுகந்தம்!...கதவைத் திறடியம்மா!...என்று அழைத்துக் கதவைத் தட்டிய சத்தத்தைக் கேட்ட உடனேயே சுகந்தாவை ஒரு துள்ளு துள்ளச்செய்தது.

ஸ்வாமியும் அம்மனும்போல இப் பாதிராத்திரி வேளையில் இருவரும் சேர்ந்தாப்போல வந்து நிற்கப்போகிறார்கள் என்று கனவிலும் கருதவில்லையாகையினால் தன் தாயாரின் குரலைக் கேட்டவுடனே பத்மநாபன் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த திகிலும் விசனமும் அடைந்து நடுநடுங்கிவிட்டான். இம்மாதிரி இருவரும் வந்திருப்பது ஏதோ போதாக்காலத்திற்குத்தான் என்று ஜானகிக்குத் தோன்றி அவளுடைய உயிரையே ஆட்டி, வாட்டி, வதைப்பதுபோலாகி துவண்டு காற்றிலசையும் மாந்தளிர்போன்று பத்மநாபன்மீது சாய்ந்து "நாதா!...நாதா!...நான் என் செய்வேன்? கடவுள் ஏன் இப்படி சோதிக்கிறாரோ தெரியவில்லையே!...நாதா!...என்னைக் கை விடாதீர்கள்!...என்னைக்காப்பாற்றுங்கள்!நாதா!...ப்ராணநாதா!..." என்று கூறியவாறு அப்படியே ப்ரக்ஞையற்றாள்.

நீங்கள் இன்னும் படிக்கவில்லையா? உயரிய நீதிகளும், உன்னதமான காதல் ரஸமும், அதியாச்சரியமான விஷயங்களும் அடங்கிய அம்ருததாரா அல்லது அதிசய சம்பவம்.

விலை அணா நான்கே

13-வது அதிகாரம்

கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்

உலகத்தில் சந்தோஷம் வந்தாலும் அடுக்கடுக்காய் வருவதும், சங்கடம் நேர்ந்தாலும் ஒன்றன் பின் ஒன்ருக நேருவதும் அனேகரிடம் காணும் அனுபவமாகிவிட்டது. நாராயணனை ஈசன் பலவிதத்திலும் சோதிக்கும் சோதனை அவனுல் தாங்கவே முடியவில்லை. முதலிலிருந்து ஏற்பட்ட பணச்செலவுக்காக வருந்துவாணு! இடையில் நேர்ந்த விபரீதங்களுக்காக அழுவாணு! இத்தனை அலங்கோலத்திலும் சோதித்தது போதாமல் வீட்டு விஷயமாக முனிசிபாலிடியார் கூறியதைக் கேட்டுக் கதறவாணு! என்னதான் செய்வான் பாவம். பூ பட்ட கண்ணில் புண்ணும் வந்தது போலாகிவிட்டது பாவம்.

வீட்டை இடித்துத் தள்ளிவிட்டால் எங்கு அண்டிப் பிழைப்பது? கட்டுவதற்கோ கையில் காலணு கிடையாது. தாயின் கர்மாதி காரியங்கள் முடிப்பதற்கு என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கின்ருன். இச் சமயத்தில் என்னவிதமாக ஆறுதல் உண்டாகும். தாமரை இலை நீர்த்துளிபோன்று தபிக்கையில் தாயாரின் சாவுக்காக தங்கையும், தங்கை வீட்டாரும் வந்தார்கள்.

பங்கஜத்தைப் பார்க்கவும் நாராயணனின் மனம் வெறுத்தது. இவளும் ஒரு மனுஷியா என்று அசங்கியமே உண்டாகியது. பங்கஜம் தாயாருக்குப் பெரிய ஒப்பாரி வைத்து அழுது அமர்க்களஞ் செய்துவிட்டு, அண்ணனைக் கட்டியழ வந்து இல்லாத பாசாங்குகளை எல்லாம் செய்யவாரம்பித்தாள்.

“அண்ணு! உன் பொறுமைக்குத் தெய்வம் துணை செய்ய

வில்லையே! உன்னை இப்படியும் சோதிக்கலாமா! உன் குணத்திற்கு இந்த கதி வரலாமா!...என்று ஏதேதோ கூறி ப்ரலாபித்து மிகவும் கண்ணீர்விட்டுக் கதறுகிறாள். நாராயணன் முதலில் அவளுக்கு ஏதும் பதிலே கூறாமல் அவளை உற்றுக் கவனித்தான். கழுத்தில் மாங்கல்ய சரடும், கையில் ஓர் கண்ணாடி வளையலும், மூக்கில் கெம்பு திருகும் தவிர வேறு ஒரு குண்டுமணி பொன்கூட உடம்பில் இல்லாது கழட்டி வைத்துவிட்டு முன் எச்சரிக்கையாக வந்திருக்கும் கோலத்தைக் கண்டதும் நாராயணனுக்குண்டான ஆச்சரியத்திற்கும் ஆத்திரத்திற்கும் எல்லையே இல்லை.

உம்...என்ன மாயஜாலம்....என்ன ப்ரலாபம்!...அடாடாடா ...அண்ணனுக்காக இத்தனை உருக்கமிருப்பவள்தான் முன் ஜாக்ரதையாக நகைகளை எல்லாம் கழட்டி அடக்கம் செய்துவிட்டுப் பெற்ற தாயின் சாவிற்கும் பிறந்த பிறப்பின் உபசாரத்திற்கும் ஒப்பாரி வைத்து வெட்கமில்லாமல் அழுவதற்கு வந்துவிட்டாள். சீச்சீ! ...மாயாஜாலக் கள்ளியே!...இந்த வேஷம் யாருக்குக் காட்டுகிறாய்! ஏதேனும் நகைகள் உடம்பிலிருந்தால் ஒருவேளை ஆபத்துக்கு உதவ நேரிடும் என்ற எண்ணத்தினாலல்லவா இப்படி செய்திருக்கிறாள்.... உம்...கடவுளே என்னைச் சோதிக்கையில் இந்த அல்ப மூதேவிகள் உதவி செய்தா வடியப்போகிறது!'' என்று மனத்துக்குள் எண்ணி வெறுப்புற்ற முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டு "சந்திரா! இங்கு வா! அப்போதிலிருந்து அத்தை அழுது அழுது களைத்துவிட்டாள். நல்ல முதல்தரமான காப்பி ஒரு டம்ளர் சுடச்சுடக் கொண்டு கொடு...வெண்ணெய் காய்ச்சிய நெய்யில் ரவை உப்புமா செய்து கொடு. அப்போதுதான் அத்தையின் கவுரவத்திற்குச் சரியாகவிருக்கும். இல்லாமல் போனால் சாப்பிடமாட்டாள்...என்று கூறினான்.

இவ் வார்த்தைகள் பங்கஜத்தின் மார்பில் கத்தி புகுந்து விளையாடுவதுபோல் சுறுக்கென்று பட்டு வேதனை செய்தது. தான் என்ன பதில் சொல்வதென்றே தெரியாது திகைத்தாள். தந்தையின் வார்த்தையைக் கேட்ட சந்திரா வெகு வணக்கத்துடன் "அப்பா! காப்பிக்குப் பாலில்லையே! என்ன செய்வேன்? நானும் அப்போதிலிருந்து

யோசித்துக்கொண்டுதானிருக்கிறேன்.'' என்று கூறி வாய்மூடு முன் நாராயணன் "அட அசடே! இது தெரியாதா! அக்கம் பக்கம் கடன் கேட்டுப்பாரு. கிடைக்கவில்லை என்றால் எங்காவது திருடியாவது மரியாதை செய்தால்தான் தகும். இல்லாவிட்டால் கவுரவம் குன்றிப்போய்விடுமே! இது தெரியாதா! சாவுக்கு வந்திருக்கும் யார் கழுத்திலேனும் பவழமாலையாவது இருந்தால் இரவலாக வாங்கிக் கொண்டு வந்து அதை விற்று காப்பிக்கொட்டை பால், சக்கரை, ரவை, நெய் முதலியவைகளை வாங்கி உடனே செய்து மரியாதையாகப் போடம்மா!....நம்மை எல்லாம் மதித்து வந்திருப்பவர்களுக்கு நாம் செய்யவேண்டாமா?'' என்று வயிற்றெரிச்சலுடன் கூறினான்.

இவ் வார்த்தைகள் பங்கஜத்தின் மனத்தில் முன்னிலும் பன்மடங்கு அதிகமாகப் பொத்தின. தான் செய்த செய்கைக்குத்தான் அண்ணன் இம் மாதிரி;குத்திக் காட்டுவதாக நன்கு தெரிந்துகொண்டாள். நாராயணனுக்குள்ள சகலமான கஷ்ட நிலைமைகளையும் நன்றாக அறிந்த உடன்பிறந்த சகோதரியே சத்ருவாக விருக்கையில் அவளுடைய மாமியார் வீட்டினரைப்பற்றிக் கேட்கவேண்டுமா!

பங்கஜத்தின் மாமியார் சற்று உரத்த குரலில் "பங்கஜம்! நாங்கள் இருக்க முடியாது. வீடு இருக்கும் நிலைமை உனக்குத் தெரியும். அதோடு இப்பதான் கல்யாணங்கள் செய்து செலவு ஏராளமாகிவிட்டது. ஆகையினால் சாவுக்கு வரிசைப் பணம் கொடுக்க கையிலில்லை. உனக்குப் புடவை வாங்கும் பணத்தை நீ கையில் வாங்கிக்கொண்டு 2 ரூபாயில் வெகு சாதா புடவை ஒன்று வாங்கிக் கொண்டு வரிசைக்காக 5 ரூபாய் கொடுத்துவிட்டு உனக்கும் குழந்தைக்கும் ரயில் செலவுக்காக மிச்சத்தை எடுத்துக்கொண்டு சீக்கிரம் வந்து சேரு.'' என்று கூறிவிட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு போய்விட்டாள்.

பங்கஜத்திற்கு இருதலைக்கொள்ளி எறும்புபோல சங்கடம் உண்டாகிவிட்டது. மாமியாருக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. தன் அண்ணன் குத்தலாக சுடச்சுடச் சொல்லிய வார்த்தைகளோ ஈட்டிபோல குத்துகின்றன. இந்த நிலைமையில்

அவன் புடவை வாங்கவாவது,பணங்கொடுக்கவாவது.....இது வீண் கனவு என்று பங்கஜம் திட்டமாகத் தெரிந்துகொண்டாள். இதைப் பற்றி யாரிடம் கேட்பது. யாரிடம் சொல்லுவது. திருடனுக்குத் தேள் கொட்டியதுபோலாகிவிட்டதால் என்ன செய்யலாம் என்று யோசித்தபடியே உட்கார்ந்திருக்கையில் உபசாரத்திற்கு உறவினர்கள் சிலர் வந்தார்கள்.

வழக்கம்போல உபசாரம் சொல்லிவிட்டு "ஏண்டீயம்மா! சந்திராவுக்கு இத்தனை வயதாகிவிட்டதே! நீயாவது ஒரு இடத்தைப் பார்த்து கட்டிக்கொடுக்கவேண்டாமா! அவன்தான் தளர்ந்து போய்விட்டான் பாவம்! என்ன செய்வது? அத்தையா! பாட்டியா! சிததம்மாளா! பெரியம்மாளா! என்று வசனம் சொல்வார்கள். உன் மைத்துனனுக்காவது நீ சிபார்சு செய்து கட்டிவைக்கப்படாதா?'' என்றார்கள்.

பங்கஜம்—(ஒருவிதமான சலிப்புடன்) போதுமே சவரணை. என்னைக் கொடுத்துவிட்டு நான் அடையும் சுகம் போதும். இந்த தரித்திர சம்மந்தத்தை அவாகள் ஒருபோதும் செய்யமாட்டார்கள். உங்களுக்கெல்லாம் சொல்வதற் கென்ன வந்தது. வாய் நோகிறதா... எழுந்துபோங்கள்...என்று துச்சமாகக் கூறிவிட்டுப் போய்விட்டாள். பந்துக்களும் இப் பிடாரித்தனத்திற்கு வெறுப்புற்றுச் சென்றார்கள்.

பங்கஜத்தின் முகத்தைக் கூட நாராயணன் சரியாகக் கவனிக்கவில்லை. அவளைப் பார்க்கவே அவனுக்கு சற்றும் பிடிக்கவில்லை. அவனுடைய விசாரத்தில் எதைத்தான் கவனிக்க மனமிசையும்? தாயாரின் கர்மாதிகள் எப்படியாவது முடிந்து தீரவேண்டும். என்ன குறைவாகப் பிடித்தபோதிலும் நூறு ரூபாயாவது வேண்டுமே! என்ன விதமாக நாம் சமாளிப்பது?'' என்று தத்தளித்துத் துடிக்கிறான்.

முனிஸிபாலிட்டியாரோ வீட்டு விஷயமாகத் தொந்தரவு செய்ய வாரம்பித்தார்கள். இப்போது அதைப் பழுது பார்க்க முடியாத நிலைமையில் நாராயணனிருப்பதை யறிந்ததும் அவர்களே வந்து

கிலமாயுள்ள பின் பாகத்தை இடித்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள். இதனால் சிறு தொகைக்கு வாடகைக்கு இருந்தவர்களும் போய்விட்டார்கள். நாராயணனுக்குள்ள மன விசனத்திற்கு கரை காண யாரால்தான் முடியும்? அவனுடைய பிராணனும் போய் விடுமோ என்ற நிலைமைக்கு வந்துவிட்டான்.

நாராயணனை துக்கம் விசாரிக்க வந்திருந்த வேணுவும் ருக்மிணியும் அவனுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டு கண் கலங்கியதோடு சீதாவின் அசட்டுத்தனமும் மூர்க்கப் பிடிவாதமும் ஒன்றுகூடி விளைவித்த பலனைக் கண்டு மனம் வருந்தினார்கள். தான் எத்தனை கெட்டிக்காரியோ, அத்தனைக்கும் நேர்மாறாகத் தன் சகோதரி இருப்பதையும் அவளால் குடும்பமே பாழாகி விட்டதையும் கண்டு ருக்மிணியின் வயிறு எரிந்தது.

இத்தகைய அறிவு கெட்ட ஆஷாடபூதி குடிகெடுக்கும் முறையில் இருப்பதைவிட இறந்துவிடுவதே மேல் என்று உடன் பிறந்த பிறப்பே எண்ணினாள். சீதாவுக்கு எத்தனையோ புத்திமதிகள் கூறினாள். மகா புத்திசாலியாகிய சந்திராவினால்தான் இனி இக்குடும்பம் சற்று தலை தூக்கி கவுரவமாக ஆகவேண்டுமென்று சந்திராவுக்கும் புத்தி சொல்லித் தேற்றினாள். நாராயணனுடைய பரிதாபத்துக்கு இரங்கி வேணு 200 ரூபாய்கள் இனாமாகவே கொடுத்து "நாராயணா! இதை உன் செலவுக்கு வைத்துக்கொள்ளு. கலங்காதே! எல்லாம் விதியின் கூற்று. வேளையின் கோலம்." என்று தேற்றினான்.

இந்த உதவியாவது தனக்குக் கிட்டும் என்று கனவிலும் கருதாதிருந்த நாராயணனுக்கு கடவுள் தன் பங்கிலும் இருந்து சமயத்திற்கு உதவும் பாக்கியம் தான் செய்திருப்பதை எண்ணி அளப்பரிய சந்தோஷத்தை யடைந்தான். தன்னுடன் பிறந்த சகோதரி தன்னை யடித்துப் பிடுங்குவதிலேயே நாட்டமாயிருப்பதையும், சீதாவின் சகோதரி உடன் பிறந்த பாசத்தினால் சமயத்தில் உதவி செய்ய முன் வந்ததையும் நினைக்க நினைக்க அவனுடைய வியப்பும், தன் சகோதரியின் மீது ஆத்திரமும் அதிகரித்தன.

தன் வயிற்றெரிச்சல் தீர விஷயங்களை வேணுவிடமே எடுத்

துக் கூறி "அன்பரே! பெற்ற தாயும் சதி செய்தாள். பிறந்த பிறப்பும் மோசம் செய்தாள்; இன்னும் கிடைத்தால் சுருட்டிக்கொள்ளவே சமயம் பார்த்துக்கொண்டிருக்கிருள். கடவுள் எனது நிராதரவான சமயத்தில் உங்களையாவது உதவி செய்ய அனுப்பினரே அதுவே நான் செய்த பாக்யம்'' என்று மேலே பேசமாட்டாது துக்கம் தொண்டையை அடைக்கக் கண்ணீர் ததும்ப நின்றான்.

வேணு தேறுதல் கூறிச் சமாதானம் செய்துவிட்டுச் சென்றான். ருக்மிணியும் சந்திராவுக்குப் பல புத்திமதிகளைக் கூறிச் சென்றாள். நாராயணனுக்கு சாக்ஷாத் வேணுகோபாலனே உதவி செய்தது போலத் தோன்றியது. தாயாரின் சடங்குகளை வெகு சிக்கனமாகச் செய்து முடித்தான். பங்கஜம் தனக்கு இங்கு ஒன்றும் செல்வாக்குகள் நடக்காதென்பதை யறிந்து ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு காரியங்கள் முடிவதற்குள் ஊருக்குப் போய்விட்டாள். அதையும் நாராயணன் பொருட்படுத்தவில்லை.

சுமார் ஒரு மாதம் சென்ற பிறகு சீதாவுக்கு உடம்பு குணமாகியது. முறிந்த சப்பை மீண்டும் சரியாகக் கூடவில்லை. சாய்த்துச் சாய்த்து நடக்கும்படியாக மட்டும் கால் கூடிவந்தது. ஆஸ்பத்திரியில் இனி வீட்டிற்குப் போகலாமென்று கூறிவிட்டார்கள். சீதா மெல்ல எழுந்து நடக்க வாரம்பித்த பிறகுதான் தனக்குக் கால் ஊனமாகிவிட்டதென்பதை யறிந்தாள். ஐயோ பாவம்! தான் கனவிலும் நினையாதபடி இத்தகைய் ஆபத்துக்கள் நேர்ந்து பல்லும் விழுந்து, காலும் ஊனமாகி உருவமே மாறிக் காண்போர் பரிகஸிக்கத்தக்க விதமாக ஆய்விட்டதை அவளால் தாங்கவே முடியவில்லை.

கையிலிருந்த பண்டம் பாழாகிய பிறகு அதைப்பற்றி நினைப்பதே போல சீதாவின் கதியும் ஆய்விட்டது. அவள் ஆஸ்பத்திரியில் படுத்து வேதனைப் படும்போதெல்லாம் தனது அசட்டுத்தனமும் தான் செய்த பிடிவாத காரியங்களும் அதனல் விளைந்த பலன்களும் அவள் மனத்தில் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி மறைய வாரம்பித்தன. சேலை வாங்கிய அன்று நாராயணன் ஆவேசத்துடன் திட்டியதைத் தவிர இன்று பரியந்தம் சீதாவிடம் பேசவே இல்லை. சந்திராவின் மூலம் விசாரித்துக்கொண்டு சென்றுவிடுவான்.

இதை யறிந்த சீதாவுக்கு தான் செய்த குற்றம் தன்னையே குத்திக் காட்டி அவளைத் தலை இரங்கக் செய்துவிட்டது. "அவருடைய வருத்தமறியாது மூர்க்கத்தனமாக நடந்துகொண்டதனலன்றோ நான் இத்தனை ஆபத்திலிருக்கும்போதும் என்னை முகமெடுத்தும் பார்க்கா வண்ணம் அவர் மனம் முறிந்துவிட்டது...ஐயோ! நான் ஏன் அம் மாதிரி ஓர் காரியம் செய்தேன்...அசட்டுத்தனமாக ஜவுளி தான் வாங்கினேனே, அவர் அவ்வளவு கோபமாக இருக்கையில் அதை சற்றும் கவனியாது தலைதுள்ளளுடன் மூன்றும் வீட்டுக்காரி யுடன் நான் ஏன் வண்டியில் கோயிலுக்குச் சென்றேன்.

அந்தோ! நான் செய்த செய்கை அந்த கண்ணனுக்கே தாங்காமல், சகிக்காமல் எனக்குச் சரியான சிக்ஷையை உடனே விதித்து விட்டார் என்றுதான் நிச்சயமாக நம்பவேண்டும். இல்லாவிட்டால் அந்த க்ஷணமே இத்தகைய பேராபத்து நேருமா!...இனி நான் எப்படி என் பர்த்தாவின் முகத்தைப் பார்ப்பது? இந்த சில மாதத்திற்குள் வீட்டில் என்ன விபத்துக்களெல்லாம் நேர்ந்துவிட்டன!... ஆகா!...கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல இனி நான் என்ன செய்துதான் என்ன உபயோகம்?...

ஒன்று இல்லாமல் விழுந்துவிட்ட பல்கள் சரியாகப்போகின்றதா! ஊனமாகிவிட்ட கால் சரியாகுமா! ராக்ஷஸி என்று எடுத்துக் கொண்ட கெட்ட பெயர் நீங்குமா! குடும்பத்திற்கு ஏற்பட்ட கஷ்டங்கள் நிவிர்த்தியாகுமா! கையிலிருந்த பணமெல்லாம் நாசமாகிவிட்டது இனி திரும்பக் கிடைக்குமா! கணவனின் கோபம் மாறுமா! இத்தனை பெரிய பெண்ணுக்கு விவாகம் ஆவதற்கு உதவி கிட்டுமா! இனி என்னதான் நடக்கும்...என் மூடத்தன்மையின் கொடுமையினல் எல்லாம் பாழாகிவிட்டதே! இப்போது உதயமான புத்தி முன்பே இருந்தால் எத்தனை நன்றாக நானும் கவுரவப்பட்டிருப்பேன். இனி இஜ் ஜென்மத்தில் எனக்கு கவுரவம் என்பது கனவிலாவது உண்டாகுமா? இல்லை...இல்லை...ஒரு போதும் உண்டாகப் போவதில்லை...சேற்றில் செந்தாமரை முளைத்ததுபோல சந்திராவுக்காவது ஈசன் நல்ல புத்தியைக் கொடுத்திருக்கிறனே அதைக் கண்டு தான் இனி சந்தோஷப்படவேண்டும். இனி என் பிழைப்பு நாளு

பேர் முன்னிலையில் வருவதற்குக் கூட யோக்யதையற்றுப்போய் விட்டது.'' என்று சீதா இரவு பகலாக எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றாள்.

அத்தனை முட்டாளாக இருந்த சீதாவுக்கும் இவ்வளவு புத்தி திடீரென்று எப்படி உண்டாகிவிட்டது என்று நாராயணனுக்கே அதியாச்சரியமாகிவிட்டது. சந்திராவை விசாரித்ததில் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கையில் கூடப் படுத்திருந்த அனேகரின் பழக்கத்தினாலும், குணத்தினாலும் சற்று தெளிவு உண்டாகியதோடு பொழுது போக்கிற்காக சில புத்தகங்களைப் படிக்கும்படியாகத்தான் கட்டாயப் படுத்திக் கொடுத்ததாயும் அவைகளைப் படித்ததனால் புத்தியுண்டாகியதென்றும் இம் மாறுதல்கள் ஏற்படுமென்று தானே கனவுகூடக் காணவில்லை என்றும் இனியாவது கஷ்டங்கள் நீங்கி நற்காலம் பிறக்குமா என்று தான் கடவுளை வேண்டுவதாயும் சந்திரா கூறினாள்.

நாராயணனுக்கு சிறிது மனத் திருப்தி உண்டாகியபோதிலும் இவைகள் நிலைத்து நிற்கட்டும் பின்னர் பார்த்துக் கொள்ளலாம். என்ற சலிப்பே உண்டாகியது. சீதாவுடன் பேசவே இல்லை. தன் காரியத்தைக் கவனிப்பதும் சந்திராவின் விவாகத்திற்காக அலைவதுமாக அல்லல் படுகிறான். சந்திராவுக்கோ தன்னால் இத்தகைய கஷ்டங்களைத் தன் பிதா அனுபவிக்கின்றாரே என்று இரவு பகலாக வருத்தம் கூறத்திறமின்றி பாதிக்கின்றது. என்ன செய்வாள் பாவம்.

எத்தனை வரன்கள் வந்தபோதிலும் ஒவ்வொருவரும் வரதக்ஷிணைகளையும், சீர் வகைகளைப்பற்றியும் கேட்காதவர்களே கிடையாது. அவ்வாறு கேட்காது வரும் வரன்களோ இரண்டாந்தாரம், மூன்றாந்தாரம், நோயாளிகள்...கடன்காரர்கள், கேவலமான குலத்தைச் சேர்ந்தவர்கள், ஒரு வேளை சோற்றிற்கும் வக்கற்றவர்கள், மகா கொடிய துஷ்டர்கள், ஊழல் நிறைந்த குடும்பத்தினர்கள் இம் மாதிரியான சொத்தல் புழுத்தல்கள் ஏராளமாக வருகின்றன.

தான் பெற்ற குழந்தையை மேற்குறித்த ஆபாஸங்கள் நிறைந்த இடத்தில் தள்ளுவதற்கு மனமின்றி திகைக்கின்றான் பாவம். எந்த

விதமாக இக் காரியத்தை நடத்துவது. கையிலோ காலணா கிடை யாது. நாராயணன் இதே மன ஏக்கம் பிடித்துக்கொண்டு சதா கவலைக் கடலில் மூழ்கினான்.

தந்தையின் அபாரமான விசனத்தை யறிந்த சந்திரா தந்தை யிடம் வினயமாகப் பேசத்தொடங்கி "அப்பா! தாங்கள் இவ்விதம் இதே நினைவாகக் கவலைப்பட்டுக்கொண்டிருப்பதால் உடல் மிகவும் மெலிந்துவிட்டது. நீங்களாவது திடமாகவிருந்தாலன்றோ எங்க ளுக்கு ஆதாரம் உண்டு. இல்லை என்றால் எங்கள் கதி என்னவாவது? அப்பா! நீங்கள் சற்றும் கவலையே கொள்ளாமல் சந்தோஷமாக விருங்கள். நான் சொல்கிறபடியே செய்யுங்கள். எனக்கு மிக்க சந் தோஷமேயன்றி சற்றும் விசனம் கிடையாது...

என்று கூறி முடிப்பதற்குள் நாராயணனின் கண்களில் நீர் ததும்பியவாறு "சந்திரா! நீ சொல்லப்போகும் விஷயங்கள் ஏற்கெ னவே எனக்குத் தெரியும்...என் கண்ணே! மகா பாவியாகிய என் வயிற்றில் இத்தனை அறிவும் அழகும் ஒன்றுகூடி மூத்தப் பெண் ணாகப் பிறந்தும் உன்னைச் சிறப்பாக நடத்திக் கண்குளிரக் காண நான் பாக்கியம் செய்யவில்லை. சித்தப்பா குப்புசாமி வீட்டு ராமசா மியை நீ மணந்துகொள்வதாகச் சொல்லப்போகிறாய். அதுதானே.

சந்திரா! என்னுயிர் போய்விட்டாலும் சரி. உனக்கு விவா கமே பண்ணாமல் வைத்திருந்து ஜாதிப்ரஷ்டனானாலும் ஆவேனே யன்றி உன்னை அந்தப் பாழுங்கிணற்றில் தள்ள நான் சம்மதிக்க மாட்டேன். அந்தோ! உன் சகோதரி ஜானகியைத் தள்ளிவிட்டு அந்த சண்டாளர்கள் மறு விவாகத்திற்கும் வரதக்ஷிணை சீர்வகைகள் முதலியவைகளுக்கும் பேயாய்ப் பறப்பதுபோல இப் பாதகர்களும் ஒரு பெண்ணை வேண்டுமென்று தள்ளிவிட்டு மறு விவாகம் செய்வ தற்கு அலைகின்றார்கள். பெண்மேல் பெண் கொடுப்பதைவிட பாழுங்கிணற்றில் தாராளமாகத் தள்ளிவிடலாம்.

சந்திரா! அந்த ராமசாமியைப் போன்ற சோதாக்கள் உலகி லேயே இருக்கமாட்டார்கள். உலகத்தில் எத்தனை விதமான அக் ருத்யங்கள் உண்டோ அத்தனையும் அவனைச் சூழ்ந்திருக்கின்றன.

கொடிய இம்சைக்குத் தாங்கமாட்டாமலன்றோ அந்த பெண்ணை அதன் பிதா அழைத்துக்கொண்டு போய்விட்டார். அவனிடம் இருந்து அவதிப் படுவதைவிட தன் வீட்டிலேயே இருக்கட்டும் என்று அவர் துணிந்திருப்பதிலிருந்து நாம் தெரிந்தா தள்ளுவது? சிச்சீ...நான் ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்.

செல்வி! நான் எம்மட்டும் வரன் வாங்கி வந்தேனோ, அம்மட்டுந்தான் பலிக்கும். இந்த நிழல் நமக்கு இது பரியந்தம்தான் ப்ராப்தமிருந்ததுபோலும். இனிமேல் கடவுள் எங்கு கை காட்டுவாரோ, தெரியாது. இந்த சிறிய வீட்டை விற்றுவிட்டு உனக்கும் இந்திராவுக்கும் விவாகத்தைச் செய்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டேன். இதோ பாரு; நேற்று பத்திரிகையிலும் விளம்பரம் போட்டுவிட்டேன். வாசலிலும் நோட்டீஸ் எழுதி மாட்டி இருக்கிறேன்.'' என்று கண்ணீர் பெருகியவாறு கூறினன்.

அந்தோ! பரிதாபம்...எல்லாம் போக இச் சிறிய குடிசை ஒன்றுதான் பாக்கி இருந்தது. குடிக்கூலி கொடுக்காமல் காலந் தள்ளிவரும் சாண் நிழலை ஈசன் கொடுத்திருந்தார். அதையும் விற்றுவிட்டு இத்தனை பெரிய சம்சாரிகள் எவ்விதம் காலத்தைத் தள்ளுவது...அடாடா!...கடைசியில் இதற்கும் வந்துவிட்டதா!...நம்மாலன்றோ இந்த தொல்லை.'' என்று சந்திராவின் மனத்தில் குத்துகிறது. அவள் கேவலம் பார்ப்பதற்குச் சிறுமியாக விருப்பினும் குடும்பத்து சுகதுக்கத்தை நன்றாக அறிந்துகொண்ட நங்கையாதலால் அவளால் இந்த விசனம் தாங்கவே முடியாமல் தத்தளிக்கின்றாள். பத்திரிகையில் வந்துள்ள விளம்பரத்தையும் வீதியில் ஒட்டி இருக்கும் நோட்டீசையும் பார்த்து விசனம் தாங்காது துவண்டுபோய்விட்டாள்.

பணத்தினல் உலகத்தையே சாதித்துவிடலாமென்ற மூட நம்பிக்கையை அடியோடு சிதைத்துத் தள்ளி, பணத்தினல் பெற முடியாத பல அரிய பொருள்கள் இருக்கின்றன எனும் உயரிய தத்துவத்தை விளக்கிக்காட்டும் சிறந்த நாவல் படாடோபத்தின் பரிபவம். விலை அணு எட்டு.

14-வது அதிகாரம்

அபலையின் தவிப்பு—சபதத்தின் சிறப்பு

எல்லோரும் சேர்ந்து புண்ணியம் சம்பாதித்துக்கொள்ளும் பொருட்டுக் காசி யாத்திரை செய்யச்சென்றதன் பலனைப் பொருளை இழந்து பரிதபிக்க நேர்ந்த குடும்பங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இந்த மாயத் திருட்டை எவ்விதமாவது கண்டுபிடித்துவிடவேண்டும் என்று கங்கணங் கட்டிக்கொண்டார்கள். ரயில்வே போலீஸாரும் விடா முயற்சியுடன் கவனித்து வருகையிலும் இதே மாதிரி ரயிலில் பின்னும் பல திருட்டுக்கள் நடந்துகொண்டே இருப்பதும் தினந்தோறும் ஒரு கேஸ் வந்துகொண்டிருந்ததும் கண்டு போலீஸாரே வியந்துபோய் விட்டார்கள்.

யாத்ரீகர்கள் ஒன்றுகூடி நமது துப்பறியும் நிபுணர் ராஜாராம் நாயுடுவை வரவழைத்து அவரிடம் இந்த விஷயங்களை எல்லாம் கூறி இதை எப்படியாவது கண்டுபிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

நாயுடு நகைத்துக்கொண்டே "இந்த சாதாரண விஷயத்திற்கு என்னை நாடவேண்டுமா! இது போலீஸாரே ஒரு நிமிஷம் கண்டு பிடித்துவிடுவார்களே!—என்றார்.

யாத்ரீகர்கள் :—இல்லை! இல்லை.....எத்தனையோ சிக்கல் முக்கலான விஷயங்களை எல்லாம் நொடியில் விளக்கிவிடும் தங்களுக்கு இதொரு ப்ரமாதமா! மனம் வைத்தால் ஐந்து நிமிஷத்தில் முடித்து விடலாம். தாங்கள் தான் இதில் ச்ரத்தை கொள்ளவேண்டும்—என்று கேட்டுக்கொண்டார்கள்.

பிறகு நாயுடு இசைந்தார். யார் யார் யாத்திரைக்குச் சென்றார்கள்? யார் யார் இதில் சம்மந்தப்பட்டவர்கள். யார் கொள்ளைக்காரர்களைப் பார்த்தது முதலிய சகலமான தகவல்களையும் விவரமாக விசாரித்தறிந்துகொண்டு சென்றார். யாத்ரீகர்களில் கோம்பிளி பாட்டியும் ஒருத்தியாகையால் அவள் இறந்துவிட்டதால் நாராயணனே அதற்கு வார்ஸாதலால் அவனையும் இவர்கள் அழைத்தார்கள்.

நாராயணனுக்குள்ள மன வெறுப்பிலும் விசனத்திலும் அவனுக்கு எதுவுமே தோன்றவில்லை. அவனுடைய கஷ்டத்திற்கு உதவ பணம் வரப்போகிறதா? "ஏதோ நீங்கள் எடுத்துக்கொள்ளும் ச்ரமத்திற்குப் பலன் கிடைத்தால் எனக்கும் ஆகட்டும். நான் பரம தரித்திரன். இவ் விஷயத்தில் இன்னும் செலவழிக்கத் தயாராக இல்லை. வந்தால் வரட்டும். போனால் போகட்டும்" என்று கூறிவிட்டான். மற்றவர்களும் இவனை தொந்தரவு செய்யாது போய்விட்டார்கள்.

வீடு விற்கப்படும் என்று பத்திரிகையிலும் வீட்டுவாசலிலும் நோட்டீஸ் போட்ட பிறகு ஜனங்கள் ஏராளமாக வருவதற்குக் கேட்கவேண்டுமா! இளஞ் சிறுமியாகிய சந்திராவுக்கு தன்பொருட்டு இப்படியாகிவிட்டதே என்கிற விசனம் கரைபுரண்டது. "பாழும் சமூகத்தில் வரதக்ஷிணை என்றும், சீர் வகைகள் என்றும் உள்ள ஊழல்களை நீக்கி சீர்திருத்தஞ் செய்ய இவ் வுலகில் ஒருவரும் இல்லையா! அந்தோ! இப்படியும் வெட்கங்கெட்டுக் கொள்ளையடிப்பதை ஓர் கவுரவமாக எண்ணித் திரியும் மனிதர்களும் ஓர் பெரிய மனிதர்களா....

அவரவர்களுக்கு சக்தி இருக்கின்றதா, இல்லையா என்பதையும் கவனியாமல் தாங்கள் உறிஞ்சுவதையே ஓர் கண்ணியமாக வைத்துக்கொண்டு பிள்ளையைப் பெற்றோர்கள் பேரமல்லவோ செய்கிறார்கள். என்ன அக்ரமம்! என்ன அனியாயம்!" என்று இடிந்து போய்விட்டாள். அதே ஏக்கத்துடன் உட்கார்ந்திருக்கையில் அவளுடைய ஆப்த சினேகிதையாகிய ரங்கம் என்பவள் அங்கு வந்தாள்.

சந்திரா தீராத் துயரத்தில் மூழ்கிக் கிடப்பதைக் கண்டு "சந்திரா! இதென்ன. ஏன் இன்று இப்படி இருக்கிறாய்...ஓகோ!...வீட்டு விஷயமாக விருக்கலாம். ஆமாம்...நான்கூட அந்த நோட்டீஸைப் பார்த்த உடனே கலங்கினேன். என்ன செய்யலாம்? எல்லாம் பிள்ளைகளைப் பெற்றோரின் கூத்து. சந்திரா! வேறு மார்க்கமே கிடையாதோ ...என்று விசனித்தபடியே கேட்டாள்.

சந்தி:—(கண்ணீர் பெருகியவாறு) ரங்கம்! வேறு மார்க்கமா!... ஆம். இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன. ஒன்று நோயாளிக் கிழவன், அங்கஹீனன், குடியன், வெறியன் முதலியோருக்கு என்

வாழ்நாளை அர்ப்பணம் செய்து உயிருடன் இறந்த பிணமாகிவிடுவது... மற்றென்று ஒருவித கஷ்டமும் இன்றி இந்தப் பாழும் உலகை விட்டுப் பரமனடி சேருவது. என்னைக் கேட்டால் முதல் காரியத்தைச் செய்வதில் ஒன்றும் சிரேஷ்டமில்லை. சிலருக்கு அந்த காரியம் மிகவும் நியாயமாகவே படுகிறது. "நான் கிழவனுக்குத்தான் வாழ்க்கைப்பட்டேன். எட்டு குழந்தைகளுக்குத் தாயானேன். என்ன குறைந்துவிட்டது? நான் ஊமைக்கு வாழ்க்கைப்பட்டும் நான்தான் எஜமானியாய் அதிகாரத்துடனிருக்கிறேன்.'' என்றெல்லாம் என்னிடமே சிலர் சொல்லுகிறார்கள். ஆகையினால் அது பயனில்லை. சமூகத்தில் எத்தனை இடங்களில் என்னைப்போன்றும் என் பிதாவைப்போன்றும் தத்தளிக்கின்றார்களோ! மீளும் வழி இன்றி கிணற்றில் தள்ளுவதுபோல் முதல் வகுப்புக் கட்டைகளுக்குத் தள்ளுகிறார்களோ! அவர்களின் வயிறு எப்படி எரிகிறதோ! யார் கண்டது?

ரங்கம்! உண்மையில் நான் மனப் பூர்வமாகக் கூறுகிறேன். இந்த வரதக்ஷிணை என்கிற அரக்கனுக்கு என்னை நான் பலி யிட்டுக் காட்டி என்னுத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறேன். இதைப் பார்த்த பிறகாவது பிள்ளையைப் பெற்ற பாவிகளின் மனது சற்று மாறாதா! அவர்களின் கடினசித்தம் கலங்காதா!

அக் கொள்ளையடிப்போருக்கு தாம் எத்தனை பொருள் பறித்தாலும் த்ருப்தியே இல்லை என்பதற்கு சகோதரி ஜானகியின் கதைதான் உனக்குத் தெரியுமே. அவர்கள் அத்தனை பணத்தைக் கொட்டியும் ஏதாவது த்ருப்தியாயிற்று! இல்லை. அவளை அடியோடு பாழ்படுத்திவிட்டு இரண்டாந்தாரம் விவாகம் செய்வதற்குத் தவிக்கிறார்கள். அவர்களுக்கு வெட்கம் மானம் ஒன்றுமில்லையா!

பிள்ளைகளைப் பெற்றோர்கள்தான் இப்படிப் பறக்கிறார்கள் என்றால் அப் பிள்ளைகளுமா வெறும் சோத்து மூட்டைகளாக, முட்டாள் தடிகளாக விருக்கும். சற்று சுயபுத்தியுடன் இருக்கலாகாதா! வரவர காலம் அதிகமாகத் துள்ளுகிறது. என் தந்தையின் இத்தனை கஷ்டங்களில் இச் சிறு குடிசையாவது சொந்தமாகவிருந்ததால் சற்று தெம்பாக விருந்தார். என் தாயாரின் மவுட்டீகத்திற்கும் குழந்தைகளின் உபத்திரவத்திற்கும்,என் தாயாரின் கால் ஊனமாகி விட்டதற்கும் குடித்தன வீட்டிலிருந்தால் என்ன கஷ்டப்பட நேருமோ!யார் என்ன கடிந்து பேசுவார்களோ! 'குழந்தைகள் அங்கு நின்றது, இங்கு நின்றது. அழுக்காக்கிவிட்டது. அசங்கியம் செய்துவிட்டது. மூக்கைச் சிந்திப்போட்டது' என்று வீட்டுக்காரர்கள் என்ன கசந்து பேசுவார்களோ!

இவைகளை எல்லாம் நினைக்கும்போதே எனக்கு கதி கலங்கு

கின்றது. ரங்கா! வறுமையினுங் கொடிய இம்சை வையகத்தில் இல்லை எனும் மனிதர்களாலும் துன்பமனுபவிக்க நேர்ந்தால் என்ன செய்வது? என் பொருட்டன்றோ என் பிதாவுக்கு இத்தகைய துன்பம்! உற்றாரும் உறவினரும் உதவிபுரிய வராவிடினும் விடிந்தால் அஸ்தமித்தால் "இத்தனை பெரிய பெண்ணை எப்படித்தான் வைத்துக் கொண்டிருக்கிறானே! பணம் இல்லை, இல்லை என்று பாடினால் எங்கு இருந்து வரும்? ஏன் வீட்டை விற்பது, கல்யாணத்தைக் கட்டித் தொலைப்பது. இப்படி இருந்தால் ஜாதி குலம் நசித்துப்போய் விடாதா!" என்று குத்திக்குத்திப் பேசுகிறவர்களுக்கு இப்போது சந்தோஷமாகிவிட்டது.

இந்த வீட்டை விற்று ஒருத்திக்குச் செய்துவிட்டால் மற்ற பெண்களுக்கு என்ன செய்வது? அப்போது மனிதர்களையேதான் விற்கவேண்டும்....நான் சிறியவளாக இருந்தபோதிலும் வயிறெரி கிறது. இந்த வீடு விற்பனையைப் பார்த்த உடன் என் மனம் கொதிக்குங் கொதிப்பை அக் கடவுள்தானறிவான்.

ரங்கம் :—(இடைமறுத்து விசனித்தபடியே) சந்திரா!...நான் சொல்வதைக் கேட்டுப் பரிகாஸம் செய்யாதே! என் இருதயம் தவிக் கின்றது. ஆப்த சினேகிதைக்கு நான் எந்தவிதத்தில் உபகாரம் செய்யமுடியும் என்று இரவு பகல் தத்தளிக்கின்றேன். நானும் உங்களைப்போன்ற பரம ஏழை.கடன் கொடுத்து வாங்கவும் என்னால் சக்தி இல்லை. தனமிருந்தால் மனமில்லை; மனமிருந்தால் தனமில்லை.

சந்திரா! இதை ஏதோ விளையாட்டுக்குச் சொல்வதாக எண்ணாதே! உண்மையில் உள்ளன்புடன் சொல்கிறேன். என் கணவருக்கு வயது 25கூட ஆகவில்லை. அவருக்கு 50 ரூபாய் சம்பளம் நிரந்தரமாகிவிட்டது, ஆண்டவன் க்ருபையினால் அதிக தொல் லைகள் இல்லை. என் விருப்பத்திற்கு என் பர்த்தா தடை சொல்ல மாட்டார். ஆகையினால் அவருக்கே நீ வாழ்க்கைப்பட்டுவிடு. அடுத்த மாதமே அவருக்கு வெளியூருக்கு மாற்றலாகிவிடும் என்று கூறுகிறார். நாம் இருவரும் ஒருயிரும் ஈருடலும்போல இருக்கலாம். இதில் ஒருவிதமான ஆக்ஷேபனையும் இருக்காதென்றே நினைக் கிறேன்.

சந்திரா! நானே மனப்பூர்வமாக இந்த உதவி செய்ய முன்வந் திருப்பதால் நீ சிறிதும் யோசிக்கவேண்டாம். நான் பரம சந்தோ ஷத்துடன் கூறுகிறேன். என்ன ஏதோபோலவிருக்கிறாய்?" என்று வெகு ச்வாதீனமாயும் அபார அன்புடனும் கூறினாள்.

இது கேட்ட சந்திரா திடுக்கிட்டாள். ரங்கத்தின் கையைப் பிடித்துக்கொண்டு "ஹா...என்ன சொன்னாய்! ரங்கம்!...உன்னுடைய ஆப்த சினேகிதையாகவிருந்து உனக்கே பாதி பங்காளியாக வந்து

உன் வாழ்வைப் பகிர்ந்துகொள்ளச் செய்கிறாயா!...ஐயோ!... வேண்டாம்...வேண்டாம்...என் மனம் இடங்கொடுக்காது. ரங்கம்! உன்னுடைய அன்பின் ஆழத்தினால் நீ இப்படிக் கூறுகிறாய். இப் பாழும் சமூகம் பெண்மேல் பெண் கொள்ளவும் சம்மதிக்கும். ஆனால் வறுமையினால் கஷ்டப்படுகிறவர்களுக்கு அனுதாபங் காட்டாது. குடி முழுகிப்போவது போல கல்யாணமாகவில்லையே என்று கூக்குரலிடுகின்றது. என்னே அக்ரமம்...

சீச்சீ! சீர்திருத்தமாம். இந்த படுமோசத்திற்கு ஒரு திருத்தத்தையுங் காணோம். படித்த மாணவர்களும் இது விஷயத்தில் பேராசை வாய்ப்பட்டு பேயாய் தவிக்கையில் கல்வி வாஸனை இல்லாதவைகளைக் கேட்கவேண்டுமா! என்ன கொடுமை. ரங்கம்! இதற்கு வேறு விமோசனம் கிடையாது. நான் முன்பு கூறிய இரண்டாவது தீர்மானந்தான் முடிவு. ரங்கம்! ஏன் விம்மி விம்மி யழுகிறாய். பேராசை நிறைந்த உலகத்தில் ஏழை மக்கள் பிழைப்பது வெகு கடினம். என் ஒருத்தியுடன் இந்த கொடுமை நீங்கட்டும் எனக்குப் பின்னேயுள்ள 5 சகோதரிகளுக்காவது இக் கொடிய கோரமான பழக்கமின்றி விவாக மாகட்டும்.

ரங்கம்! என் தலையில் எழுதி இருப்பது போலத்தான் யாவும் முடியும். என் தலையில் அங்ஙனம் தூர்மரணமாக எழுதி இருந்தால் அதை நீ யல்ல, வேறு யார் தடுத்தும் நிறுத்த முடியாது. என்னுடைய இத்தனை சிறு பிராயத்தில் என் மனம் தவிப்பதேபோல வேறு யாருக்கும் தவிக்க முடியாது...ரங்கம்! ஒருக்கால் நான் இறந்துவிட்ட பின்னர் நீ என் மீதுள்ள அன்பின் பொருட்டு இப் பாழும் வரதக்ஷிணையின் அலங்கோலத்தைப்பற்றி பலமாகக் கண்டித்து அதைத் தாக்கிப் பத்திரிகைகளில் எழுது. ப்ரஸங்கங்கள் செய். உலகில் இதுபோன்று எத்தனை இடத்தில் அனியாயமாக மரணம் நேரிடுகிறதோ, அதை தாராளமாக எடுத்துக் கூறி மக்கள் மனத்தைக் கலக்கிவிடு. இதுதான் என் வேண்டுகோள்.'' என்று கண்ணீர் பெருகக் கூறினாள்.

இது கேட்ட ரங்கம் மிகுந்த பயத்துடன் "ஹா! சந்திரா! சந்திரா! நான் உன்னை விடமாட்டேன்! இந்த எண்ணத்தை நீ அடியோடு மாற்றிக்கொள்ளவேண்டும். நான் இப்போதே இதை உன் பெற்றோரிடம் தெரிவித்துவிடப்போகிறேன். எத்தனை கஷ்டங்கள் வந்தபோதிலும் அவைகளைப் பொறுமையுடன் அனுபவித்து ஜெயிப்பதுதான் உத்தமமாகும். உன்னுயிரை விடுவதற்குக்கூட உனக்கு அதிகாரம் இல்லை. ஏனெனில் இது போலீஸாருக்குத் தெரிந்தால் தற்கொலை புரிந்துகொள்ள யத்தனித்த குற்றத்திற்கு உன்னைக்

கைது செய்துவிடுவார்கள். நல்ல வேளைக்குத்தான் இத்தனை நாள் ஊரில்லாது இருப்பினும் இப்போது வந்து சேர்ந்தேன்.—

என்று பேசுகையில் சந்திரா இடை மறுத்து பேசத்தொடங்கி "ரங்கம்! இதென்ன இத்தனை அவசரப்படுகிறாயே! நான் சொன்னால் உடனே நடந்துவிட்டதாகவே எண்ணிவிட்டாயே! அப்படிக்கொன்றும் மூடத்தனமாகச் செய்யமாட்டேன்: பயப்படாதே. என் மனது தவிக்கும் தவிப்பில் இப்படிக் கூறினேன். ரங்கா! நீ இதை யாரிடமும் வெளி யிடாதே!'' என்று தனுக்காகக் கூறிவிட்டாள். ரங்கமும் இதைப்பற்றியே பின்னும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து பின்னர் வீட்டிற்குச் சென்றாள்.

சந்திரா விசனமே வடிவாக ஓர் விசுப் பலகையில் உட்கார்ந்திருந்தாள். அச்சமயம் "அம்மா! அம்மா!...வீட்டில் யாரிருப்பது? என்ற ஒரு குரல் கேட்டது. உடனே சந்திரா தலைநிமிர்ந்து பார்க்கையில் ஓர் வாலிபன் அங்கு வந்து "அம்மணி! இவ் வீடு விலைக்குக் கொடுப்பதாக விளம்பரம் கண்டேன். இதன் விலை என்ன? இது விவரம் யாரிடம் பேசவேண்டும்?'' என்று கேட்டான்.

வீட்டு விஷயத்தைக் கேட்கும்போதே 'சந்திராவின் விசனம் பொங்கிவிட்டது. அவள் கண்ணீர் பெருகியவாறு "ஐயா! என் பிதா மாலை 6 மணிக்கு வருவார். அவரைக் கேட்டால் விவரம் விளங்கும்.'' என்று கூறினாள். அதற்குமேல் அவ் வாலிபன் ஏதும் கேட்காமல் போய்விட்டான்.

அவ் வாலிபனின் உள்ளம் கலங்கிக் குழம்பிப்போய்விட்டது. ஏனெனில் அவனுடைய வாழ்நாளில் இன்று உண்டாகிய ஓர் புது உணர்ச்சியும் மன வருத்தமும் வெறுப்பும் என்றுமே உண்டாகியதில்லையாதலால் அவன் மனம் அவனையே மீறிச் சென்றுவிட்டது.

அச்சுதன் சாமானியக் குடும்பத்தில் பிறந்தவனெனினும் மகா புத்திசாலியாயும் படிப்பாளியாயும் விளங்கும் வீர வாலிபன். அவனுடைய பெற்றோர்கள் அவனுடைய புத்தி கூர்மையையும் படிப்பின் விசாலத்தையும் காணக்காண அவர்களுக்கு மதி கெட்டுவிட்டது. வரதக்ஷிணை என்கிற சுழல் காற்றில் அவர்களும் சிக்கிக்கொண்டார்கள். S. S. L. C. படிக்கையில் 1000 ரூபாய் வரதக்ஷிணை மற்ற சீர் வகைகள் 2 ஆயிரம் ரூபாய் என்றும் F. A. வுக்கு வரதக்ஷிணையே 2 ஆயிரம் என்றும் பேசினார்கள். இப்போது அச்சுதன் ஹானர்ஸ் கடைசீ வருடம் படிப்பதால் வரதக்ஷிணை நாலாயிரத்திற்குக் குறைந்து பேசுவதே கிடையாது. அதற்குமேல் மற்ற சீர் வகைகள். அச்சுதனுக்கு இந்த விவகாரங்கள் ஒன்றுமே தெரியாது. அவன் அதைக் கவனிப்பதும் கிடையாது. தன் படிப்பிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்தி இருந்தான். இப்போது அவனுக்கு

விவாகத்திற்காகப் பெண் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரதக்ஷிணையாக கையில் ரொக்கம் கொடுப்பதற்குப் பதிலாக மாப்பிள்ளையின்பேரில் ஒரு வீடு வாங்கிக் கொடுத்துவிடுவதென்றும் அதைத் தவிர கல்யாண சீர்வகைகள் முதலியன நடப்பதென்றும் அவனுடைய பெற்றோர்கள் சொல்லி பேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அதற்காகத்தான் சிறிய வீடாக விலைக்கு வருகிறதா என்று எதிர்பார்த்து தேடிக்கொண்டிருந்தார்கள்.

அச்சுதனின் பிதா விளம்பரத்தில் கண்ட விவரத்தைப் பிள்ளையிடம் கூறி அதைப் போய் பார்த்து விசாரித்துக்கொண்டு வரும்படி தெரிவித்தார். அச்சுதனும் அப்படியே வெளிக் கிளம்பி வந்தான். இவ் வீட்டின் வீதியில் நோட்டீஸைப் பார்த்துவிட்டு நடைப்பக்கம் வந்தான். அப்போது சந்திரா கண்ணீர் பெருகத் தொண்டையடைக்க, தாங்கமாட்டாத விசனத்துடன் கூறிய வார்த்தைகள் அச்சுதனின் காதில் திடீரென்று விழுந்ததும் தன்னையறியாது திடுக்கிட்டான். அவள் சொல்லிய ஒவ்வொரு வார்த்தையும் அவன் மனத்தில் ஆணிபோலப் பாய்ந்தது.

"இச் சமயம் நாம் உள்ளே செல்லலாகாது. இந்த சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டுதான் போகவேண்டும்...ஹா...உலகம் இப்படியா இருக்கிறது. இதை யறியாமலா என் பெற்றோர்கள் என்னையும் ஏலம் போட்டுப் பணம் பறிக்கத் துணிந்தார்கள்...அடாடா!... மாணவர்களுக்கு மாமதி கெட்டுவிடாது என்ற வாக்கியம் என்னையே குத்திக்காட்டுவதுபோல விருக்கின்றதே!....அந்தோ!....விபரீதம்... விபரீதம்...இத்தனை கொடிய பழக்கம் இந்த வரதக்ஷணை வாங்குதல் என்பதை நான் இந்த நிமிடம் பரியந்தம் நினைக்காது போய்விட்டேனே.

என்ன! என்ன!...இந்த பெண் தற்கொலை புரிந்துகொள்ளப் போகிறாளா...இந்த வரதக்ஷிணை அரக்கனுக்குத் தன்னை பலி யிடப் போகிறாளாமே...என்று உள்ளிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் உற்று கேட்டுக்கொண்டே அதற்குத் தக்கவாறு மனம் மாறி உணர்ச்சி பெருகி அவனை அபாரமாக வதை செய்துகொண்டே இருக்கிறது. வெளியே போகவும் மனம் வரவில்லை. உள்ளே வரவும் துணியவில்லை.

தன்னை யாராவது கண்டு ஏதேனும் நினைக்கப்போகிறார்களே என்று நினைவு உண்டாகியபோதிலும் அவனால் தடுக்க முடியாது கட்டுண்ட நாகம்போல அம் மொழிகளையே கேட்டுக்கொண்டு நின்றுவிட்டான். சந்திராவும் ரங்கமும் பேசி முடிந்து ரங்கம் வீட்டிற்குப் போகப்போவதை யறிந்த அச்சுதன் வீதியில் விலகிக்கொண்டு அவள் சென்றபிறகு உள்ளே சென்று விசாரிக்க எண்ணினான்.

நாம் முன் சொல்லியபடி உள்ளே வந்து தான் ஒன்றுமறியாதவன்போல சந்திராவைக் கேட்டான். விசனமே வடிவமாகிக் கண்ணீர் பெருகும்போதும் சந்திரா தனது சோபையை இழக்காது பெயருக்கேற்ற ப்ரகாசிக்கும் முகத்தைப் பார்த்ததும் எத்தகைய கல்லும் கரையும், இரும்பும் உருகும் என்றால் ஏற்கெனவே விசனத்தினால் தவித்துக் குழம்பும் அச்சுதனின் மனம் வேதனைக்கடலில் மூழ்கியது என்று கூறவேண்டுமா!

'மண்ணுலக மாதோ! விண்ணுலகப் பாவையோ என்று ஐயுறத்தக்க வடிவழகைக் கொடுத்த ஈசன் தீராத வறுமையையும், மாறாத மனத்துயரத்தையும் ஏன் கூடவளித்து வாட்டுகிறான்?'' என்று தனக்குள் எண்ணி விசனித்தபடியே அங்கு நின்ற சில வினாடிகள் சந்திராவையே உற்று நோக்கினான். அதற்குமேல் பதில் ஏதும் சொல்லாமல் திரும்பிவிட்டான்.

அவனுடைய கால்கள் நடந்துசெல்கின்றனவேயன்றி மனது குழம்பிப்போய் வரதக்ஷிணையின் மூலம் மக்கள் அல்லல்படும் விஷயமாகத்தான் கேட்ட வார்த்தைகளும், சந்திராவின் விசனமே வடிவாகிக் கண்ணீர் நிறைந்த விழிகளுமே அவன் கண்முன்பு தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன. அங்கிருந்து நேரே வழக்கம்போல பத்திரிகைகள் வாசிக்கும் இலவச வாசக சாலைக்குச் சென்றான்.

பத்திரிகைப் படிப்பிலும் மனம் நாடவில்லை. கையில் பத்திரிகையும், மனத்தில் வேறு எண்ணங்களும், கண்முன்பு வேறு காட்சியும் அவனைச் சுற்றிக்கொண்டு பாதிக்கின்றன. பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில்

கோர சம்பவம்! கொடிய சம்பவம்! பரிதாபக் காட்சி!

சேதுபதி என்கிற ஏழைக் குடியானவனின் மகள் செல்லம்மாளுக்கு விவாகம் செய்விக்கும் வயது வந்தும் பிதாவுக்கு ஏற்பட்ட வறுமையின் கொடுமையினால் வரதக்ஷிணையும் சீர் வகைகளையும் செய்ய சக்தியற்று செல்லத்தை ஓர் வியாபாரக் கிழவனுக்கு 4-ம் [illegible]ரமாகக் கொடுத்து கிழவனிடம் 10,000 ரூபாய் பெற்றுத் தன் [illegible]ம்ப கஷ்டத்தைத் தீர்த்துக்கொண்டான். கிழவனை மாலையிட்டு [illegible]த்தை தன் பிதாவுக்கு வாங்கிக்கொடுத்தபிறகு கல்யாணத்தன்று [illegible]ப தன்னைத்தானே தீயிட்டுக்கொண்டு இறந்தாள். அவள் [illegible] வைத்த கடிதத்தின் சாராம்சமாவது :—

[illegible]நான் என் இச் சிறிய பிராயம்முதல் ஆவி நீங்கும் வரை [illegible] கிழவருடன் வாழும் சுகத்தைவிட அக்னி பகவா

னுடன் அரை நாழி விளையாடி என் ஆவியைப் போக்குவதே என் வாழ்நாளில் நான் அடையும் சுகமாகும். பிள்ளைகளைப் பெற்ற படுபாவிகளும் படித்தும் புத்தி இல்லாத பிள்ளைகளும் வரதக்ஷிணைப்பேயுடன் விளையாடும் பயனால் என்போல இன்னும் எத்தனை உயிர்கள் பலியாயிற்றோ, இன்னும் ஆகப்போகின்றதோ! கடவுளே! உலகத்தில் எத்தனையோ அரக்கர்களை சம்கரித்த உனக்கு இவ் வல்ப அரக்கனைக் கொன்று என் போன்ற ஏழைகளுக்கும், ஏழைப் பெற்றோர்களுக்கும் துன்பம் களையமாட்டாயா! இனியாவது கண் திறந்து பார்ப்பாயா.......

செல்லம்.''

செல்லத்தை ஆஸ்பத்திரியில் கொண்டு விட்டார்கள். விடியற் காலம் அவள் துயரமும் விடிந்துவிட்டது. அயர்ந்து பெருந்துயிலில் ஆழ்ந்துவிட்டாள். அவளுடைய கடிதத்தினால் அது தற்கொலை என்று அதிகாரிகள் கூறிவிட்டார்கள். ப்ரேத அடக்கமாகிவிட்டது. கொடிய வரதக்ஷிணையே! உன்னாட்சியின் கூற்றோ இது!''

என்றதைப் படித்ததும், அச்சுதனின் இருதயம் வெடித்து விடும்போலாகிவிட்டது. "இதென்ன ஆச்சரியம்! இத்தனை கொடிய பழக்கம் ஒன்று இருப்பதைக்கூட இதுபரியந்தம் கவனியாத முட்டாளாகிவிட்டேனே! எக் காரியமும் கவனிக்கத்தொடங்கினால்தான் அதன் உண்மை விளங்கும். ஆகா! என்ன விபரீத பழக்கம்... சேச்சே! அந்தப் பெண் சொல்லியது மிகவும் வாஸ்தவம். அவளுடைய மனக் கொதிப்பின் எல்லையை அவ் வாக்கியம் ஒன்றே எடுத்துக் காட்டுகின்றதல்லவா!

ஆம்! ஆம்! அப் பெண் சொல்லியதுபோன்று என்போலுள்ள படித்தவர்களே இக் கொடிய காரியத்தைக் கவனியாமலும், சிலர் கவனித்தும் உடந்தையாயிருந்தும் இதை வளர்த்திக்கொண்டு போனால் அறிவில்லாதவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களைப்பற்றிக் கூறவேண்டியதே இல்லை.'' என்று தனக்குள் நினைத்தான். எத்தனை விதத்தில் அவன் மனத்தை மாற்ற முயன்றும் அவனால் முடியவில்லை. சந்திரா சொல்லியது போல அவள் தற்கொலை புரி[ந்து] கொள்வதுபோலான பயங்கரத் தோற்றமே அவனது கண்மு[ன்] தாண்டவமாடத் தொடங்கியது. அதைப்பற்றியே சிந்தித்த[வ]ணம் மீண்டும் சந்திராவின் வீட்டுப்பக்கம் வந்தான்.

நாராயணன் வந்துவிட்டானென்ற சாக்கை [...] கொண்டு மறுபடியும் சந்திராவின் வீட்டிற்குள் வந்தான் [...] முன்பிருந்த நிலைமையில் ஒரு எள்ளளவும் மாறுதலி[...]

ஏக்கத்தினுல் தலைவிரிகோலமாகப் புலம்பியபடியே இருப்பதைக் கண்டான். என்ன பதில் சொல்வான். "அம்மா! வீட்டுக்காரர் வந்து விட்டாரா!...நான் இவ் வீட்டை முற்றும் பார்க்கலாமா!" வென்று கேட்டான்.

சந்திரா சலிப்புடன் "ஐயா! அவர் இன்னும் வரவில்லை. தாங்கள் தாராளமாக வீட்டைப் பார்க்கலாம்" என்று வெகு வணக்கத்துடன் கூறினுள். சந்திராவே உடன்வந்து வீட்டைக் காட்டினுள். அச்சுதனும் வீடு முற்றும் சுற்றிப் பார்த்துவிட்டு 'நான் பிறகு வருகிறேன்' என்று கூறிவிட்டுச் சென்றுன். அதற்குமேல் அன்னியப் பெண்ணுகிய சந்திராவிடத்தில் என்ன தான் பேசமுடியும். சிந்தனையிலாழ்ந்தபடியே தன் வீட்டை யடைந்தான்.

அப்போது அவனது பெற்றோர்கள் யாருடனே உரக்கப் பேசும் வார்த்தைகள் காதில் பட்டதும் அப்படியே மெத்தைக்குச் சென்று இதை கவனிக்கத் தொடங்கினுன். அவன் தாயார் உரத்த குரலில் "வெகு அழகு. பையனென்ன மூடமா! முடமா! படிப்பில்லாத கட்டையா! அழகற்ற குரூபியா! ஆகாரத்தில் குறைந்தவனு! ஒரு விதமான குறையும் இல்லை. பார்ப்பதற்கோ ராஜதுரைபோல விருக்கிறுன். படிப்போ ஆனர்ஸ் பி. ஏ. புத்திசாலித்தனமோ உலகமே மெச்சுகிறது. இத்தனை அருமைகள் வாய்ந்த பையனுக்கு ஐயாயிரத்திற்குக் குறைந்து வரதக்ஷிணை வாங்கினுல் நாலுபேர் கேலிபண்ண மாட்டாளா?

வரதக்ஷிணைக்குத் தக்கபடி வரிசைகளும், வரிசைகளுக்குத் தக்கபடி உடுப்புகளும், உடுப்புக்குத் தக்கபடி உபசாரங்களும் செய்யாவிட்டால் மரியாதைக்குக் குறைவாகிவிடாதா! அதை முதலில் கவனியுங்கள்." என்றுள். பிதாவும் அதையே ஆமோதித்துத் தாளம் தட்டினுர். உடனிருந்தவர் "நீங்கள் சொல்லுவது மிகவும் அதிகமாக வன்றே இருக்கிறது. அவர்கள் இத்தனை பெரிய தொகையைக் கொடுக்கவும் வரிசைகள் செய்யவும் சற்று யோசிக்கின்றுர்கள். அவர்கள் பெரிய சம்சாரிகள். இன்னும் நான்கு பெண்களுக்குச் செய்யவேண்டும். அவர்கள் என்ன செய்வார்கள். வரதக்ஷிணை ...யத்தில் நீங்கள் சற்று தயை காட்டவேண்டும். ஒரு பைசாவும் ...டுக்கமுடியாது" என்றுர்.

இதைக்கேட்ட அவன் தாயார் சீறிய கோபத்துடன் "ஓய்! ...ழியே பார்த்துக்கொண்டு எழுந்து செல்லும். வரதக்ஷிணை ... வகையில்லாத அல்பனுக்கு மருமகப்பிள்ளை மட்டும் இத் ...கஸ்துடன் வரவேண்டுமா! முடியாது. 5-க்குக் குறைந்தால் ...வேண்டாம். என் மகனுக்கு எத்தனையோ பேர் போட்டி ...ண்டு காத்திருக்கிறுர்கள். இக்காலத்துப் பிள்ளைகளின்

...8

மதிப்பையறியாது பேசுகிறீரே! 5-க்கு ஒருபைசா குறைந்தாலும் என் மகன் ஒப்புக்கொள்ளமாட்டான். அவனுக்கு வரதக்ஷிணையுங் கொடுத்து விவாகம் செய்வித்து பத்தாயிரம் ரூபாய் செலவிட்டு சீமைக்கு அனுப்பி I. C. S. பரீக்ஷைக்குப் படிக்கவைக்கவும் பலர் காத்திருக்கிறார்கள். பையன் சம்மதிக்கமாட்டான் போய் வாரும்" என்று நிர்த்தாக்ஷிண்யமாகக் கூறினாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் அச்சுதனுக்கு உண்டாகிய ஆத்திரத்திற்கோர் எல்லையே இல்லை. தன்மீது பழியைப்போட்டு இவ்விதம் கூறுவதை இப்போதுதான் அறிந்தான். இதுபரியந்தம் வரதக்ஷிணை வாங்குவதென்றால் பெரிய கவுரவமாக இவனும் நினைத்திருந்த எண்ணம் முற்றும் சந்திராவின் வாயிலிருந்து வந்த சொற்களாலும் அவளுடைய சோகம் நிறைந்த முகத்தின் ப்ரகாசத்தினாலும் அடியோடு மாறுதலையடைந்து புதிய இதயம் படைத்த புதிய மனிதனைச் செய்துவிட்டது.

ஏழைகளின் பரிதாபத்தை, உள்ளத்தையறிந்தவனுதலால் என்றுமில்லாத ஓர் உணர்ச்சியும் ஆவேசமும் உண்டாகியது. சில விநாடிகள் தியங்கினான். சடக்கென எழுந்து சற்றும் பயமின்றி அவர்கள் முன்னிலையில் சென்று "அம்மா! இப்பரந்த விசாலமான உலகத்தில் பிறந்தும் இதுபரியந்தம் நானும் கேவலம் ஓர் உணர்ச்சியற்ற கட்டையாய் பிறர் துயரத்தையறியாமலும் பெற்ற தாய்தந்தையர்களாகிய நீங்களே என்னை விலைகூறி விற்கும் கோலத்தைத் தெரியாமலும் முட்டாளாகவிருந்ததுடன் பெண்வீட்டாரைக் கொள்ளையடிப்பதை கண்ணியமாக நீங்கள் கருதி உபதேசித்ததை நானும் ஆமோதித்தே மகா கேவலமான புத்தியுடன் இருந்துவிட்டேன்.

இந்த நிமிடத்துடன் அந்த வரதக்ஷிணை என்கிற பேராசை எண்ணத்தை அடியோடு விட்டுவிடு. இனி நான் முன்போல சம்மதிப்பேன் என்று கனவு காணுதே!....அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! பிள்ளைகளைப் பெற்ற பேராசைப் பேய்கொண்ட உங்கள் போன்றவர்களின் கடினமான இருதயத்தின் தீயால் எத்தனை குடும்பங்கள் சிதறுண்டுபோகின்றன! எத்தனை பெண்கள் ஆவி நீக்க நேர்கின்றது எத்தனை பெற்றோரின் மனம் அளிந்த புண்ணுகி அலைகின்றது. அ பப்பா....இவைகளையறிந்த பிறகன்றோ அவ்வுணர்ச்சி உண் கின்றது.

என்று கூறி முடிப்பதற்குள், தந்தை இருகைகளினுலும் லறைந்துகொண்டு "அட படுபாவி மகனே! இதென்னடா புத்தி உனக்கு வந்துவிட்டது. எந்த சண்டாளர்களடா இப்படி உபதேசம் செய்து கலைத்துவிட்டார்கள். இத்த இல்லாத வேதாந்தமும் ஜீவகாருண்யமும் திடீரென்று முளைத்துவிட்டது. பெற்றோருக்கு எதிர்த்துச்சொ

உன் புத்தியின் லக்ஷணமோ !...வரதக்ஷிணை வாங்குவது பேராசை யாடா !...நாங்களாடா பேராசைக்காரர்கள்!

அட பாவி மகனே! உனக்கு நாங்கள் கண்ணை மூடிக்கொண்டு படாத கஷ்டப்பட்டுச் சேர்த்த பணத்தை ஜலம்போல இறைத்துப் படிக்கவைக்காவிட்டால் உன் முகத்தை யாரடா துப்புவார்கள்! செல வழித்த பணத்தில் பாதியைத்தானே கேட்கிறோம். ஏன்? பெண்ணைக் கொடுப்பவனுக்குக் கேடென்ன...

இடைமறித்து "அப்பா! போதும் உமது நியாயம். மக்களைப் பெற்றவர்களுக்கு அவர்களை போஷிப்பதும் வளர்ப்பதும் அறிவு ஊட்டுவதும் பெற்றோரின் கடமை. அக் கடமையை நீங்கள் செய் ததில் ஒருவித அதிசயமும் இல்லை. உங்கள் கடமைக்குச் செய்த செலவை பிறரை அடித்துப் பிடுங்குவதுதான் நியாயமோ! அதுதான் கவுரவமோ! இது ஒருபோதும் ஒப்புக்கொள்ள முடியாது. பிறர் துன்பத்தை யறியாது கட்டையாக வளர்ந்த நாளின் பலன் போதும். உங்களுக்கோர் பெண்ணிருந்தால் அப்போது அக் கொடுமை தெரி யும். நிழலிலேயே இருப்போருக்கு வெய்யிலின் உஷ்ணம் எவ்வாறு தெரியும்? அதுபோலத்தான் உங்கள் நிலைமை இருக்கிறது" என்றான்.

இதற்குள் தாயார் குறுக்கிட்டு "ஐயையோ! வயித்தெரிச்சல் கொள்ளையே! நீ நாசமாகப் போக! எங்களையாடா நீ எதிர்த்துப் பேசுகிறாய்? எங்களுக்குப் பெண்ணிருந்தால் நாங்கள் கட்டாயம் பிச்சை எடுத்தாவது வரதக்ஷிணை கொடுப்போம். இல்லாவிட்டால் அதற்குத் தகுந்த பிச்சைக்காரனைத் தேடி மணம் செய்விப்போம்... அட அக்கிரமமே! உனக்கு திடீரென்று யாருடா புத்தியைக் கலந்து மயக்கி ஏமாத்திவிட்டார்கள்?" என்று கூறி துள்ளிக் குதித் துத் தாண்டவமாடுகிறாள்.

பிதாவோ சிங்கம்போலச் சீறிவிழுந்து 'ஏண்டி! இதென்னடி சனியனாகப் பேசுகிறது. வரதக்ஷிணையை நம்பி வீட்டையும் பேசி வாங்குவதாகத் தீர்மானித்துவிட்டேனே! இப்போது என்னடி செய் வது. ஐயோ! க்ரகசாரமே!...மூர்க்கம் பிடித்த மகன் எங்கோ ஓடி விட்டதே! யார் என்ன செய்திருப்பார்கள்? இப்படி திடீரென்று ..த்தி கெட்டுவிடும் என்று நான் நினைக்கவில்லையே!...என்றார்.

அம்மாளுக்கும் மகனின் மாறுதல் பெரிய அதிர்ச்சியை யுண் ..கிவிட்டது. "ஆமாம்ணுக்கா! உங்கள் மருமாள் எச்சிமி இருக் ..ள! அவள்தான் தன் பெண்ணை எப்படியாவது கொடுத்துவிடுவ .. இம்மாதிரி கலகம் செய்திருப்பாள். எனக்கு அவள்மீது ..தேகம் உண்டாகிறது. அவள் நாசமாய்ப்போக. குடியைக் ..ன் வந்த மகா கொடும்பாவி. அவள் வாழுவாளா! விளங்கு

வாளா?', என்று கண்மூடி மூடத்தனமாகக் கூச்சலிட்டுக் கத்துகிறாள்.

பழியோரிடம் பண்டமோரிடம் என்பதுபோல இவர்கள் ஆத்திரத்தினுல் கூத்தாடித் திட்டித் தவிக்கிறார்கள். அச்சுதன் வீட்டிலிருந்தால் இவர்கள் ஏதேனும் தொந்திரவு செய்வார்கள் என்று எண்ணிப் பேசாமல் வெளியே போய்விட்டான். அப்போது நன்ருக இருட்டும் சமயமாகிவிட்டது. மாலை நேரத்தின் மகிழ்ச்சி மக்களின் மனத்திற்கு வெகு ரம்மியமாக விருந்தது.

கடற்கரைக்கு எண்ணிக்கையற்ற ஜனங்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அச்சுதனும் கடற்கரைக்குச் சென்று ஓர் தனித்த இடத்தில் மணல்மீது தன் மேல்துண்டை விரித்துக்கொண்டு படுத்துவிட்டான். அவன் மனத்தில் அன்று சந்திரா வீட்டில் கேட்ட வார்த்தைகளும், சந்திராவின் பரிதாப முகமும், பின்னர் பத்திரிகையில் கண்ட செய்தியும், அதன் பிறகு தன் வீட்டில் நிகழ்ந்த சம்பவங்களும் ஒன்றன்பின் ஒன்ருகத் தோன்றி அவன் கண்முன்பு தாண்டவமாடிக் காட்சி கொடுத்துக்கொண்டே இருக்கின்றன. இவ் விஷயங்களில் எதையும் இவனுல் விலக்கவோ மறக்கவோ முடியவில்லை. திரும்பத் திரும்ப அவைகளையே எண்ணி எண்ணி பெருமூச்சு விட்டுக் கலங்கியவாறு படுத்திருந்தான்,

அவனுக்குச் சற்று தூரத்தில் நாராயணன் ஒரு வியாபாரத் தரகனுடன் "ஐயா! அத்தனை சிறு தகைக்கு விற்று எனக்கு என்ன பலன். கேவலமாகக் கேட்கிறீர்களே?" என்ருன். அதற்குத் தரகன் "சார்! அந்த வீட்டில் சாமான்கள் ஒன்றுமே இல்லை. தெருவும் பார்வையானதல்ல. ஒரு சந்து. ஆகையினுல் எப்படி விலை எழும்பும்? இன்னும் கேட்கப்போனுல் நான் சொல்கிற நாலாயிரம் கூட அதிகந்தான். ஏதோ நீர் தெரிந்தவராயிற்றே! அதோடு பெரிய சம்சாரி, வறுமையினுல் நொந்துபோய்விட்டீரே என்று நான் வாங்குபவரிடம் இதையே உறுத்துச் சொல்கிறேன். யோசனை செய்து சொல்லுங்கள்" என்ருன்.

நாராயணனுக்கு விசனமோ தாங்கமுடியவில்லை யாதல
பிறகு சொல்வதாகக் கூறிவிட்டு வருத்தத்துடன் போய்விட்ட
நாராயணன் தலை மறைந்த சற்று நேரத்திற்கெல்லாம் தூர
உட்கார்ந்திருந்த மனிதன் எழுந்து இங்குவந்து "ஏன் சார்!
பழமா! அந்த பேர்வழி எத்தனையில் இருக்கிறார்" என்ருன்.
குத் தரகன் "ஏன் சார்! இதெல்லாம் எனக்குத் தெரியாதா!
காரர்களே 6க்கு மேலே பார்க்கிறார்கள். நான் அதற்
குறைத்து 5க்குத்தான் சொல்லி இருக்கிறேன். அதற்

கொள்வது கஷ்டம். அதில் முடிந்தால் உமக்குக் கொள்ளை லாபமன்றோ! அதற்குள்ளேயே என்றுகையையும் சேர்த்துவிடவே நான் பிரயத்தனப்படுகிறேன்; சகலமும் நாளை வந்து சொல்லுகிறேன்". என்றான்.

இந்த வார்த்தைகள் அச்சுதன் காதில் பட்டதும் உலகத்தில் "இப்படியும் தரகுக்காரப் பாவிகளை ஈசன் படைத்திருக்கிறாரா! அடாடா! அவரிடம் நாலுக்குக்கூட வராதென்றான். இவரிடம் 6க்கு மேல் பார்க்கிறான் என்றான். மத்தியில் தான் விழுங்கி ஏப்பமிடுவதற்கு வழியன்றோ செய்கிறான். என்ன அனியாயம். கொள்ளையடித்தும் ஏமாற்றியும் பிழைப்பதையே ஒரு தொழிலாகவன்றோ கொண்டிருக்கிறார்கள்.

உம். தன்னுடைய அவசரத்திற்கு விற்கிறான் என்பதை யறிந்தால் இன்னும் ஏமாற்றுவது சுலபமன்றோ! ஐயோ! பாவம்! இவர்கள் பேசுவதிலிருந்து நாம் பார்த்த வீட்டுக்காரர் இவர்தான் என்று தெரிகின்றது. என்ன சோகமாகவிருக்கிறார் பாவம்!" என்று வருத்தமுற்றான்.

நாராயணன் வீட்டிக்கு வந்ததும் "சந்திரா! இங்கு யாராவது வந்து வீட்டைப்பற்றி விசாரித்தார்களாம்மா?" என்று கேட்டார். சந்திரா விசனத்துடன் "எத்தனையோ பெயர்கள் வந்து கேட்டார்களப்பா! ஏனப்பா! இதை விற்றேதான் தீரவேண்டுமா!" என்று கண்ணீர் பெருகக் கேட்டாள்.

நாரா:—ஆமாம் கண்ணே! இதை விட்டால் வேறு வழி இல்லை. வியாபாரத் தரகன் மத்தியிலே சுரண்டப் பார்க்கிறான். நாலாயிரத்திற்குமேல் இதில் வராது என்கிறான். என்ன செய்வேன்? நாலாயிரத்தில் ஒரு ஆயிரம் வரதக்ஷிணையும் ஓராயிரம் சீர்வகைகளுமாக இருவருக்கும் செய்தால் மிச்சம் காலணாக்கூட இல்லையே! கல்யாண செலவுக்கு என்ன செய்வேன். இதனால் இரண்டு பேர்களுக்குச் செய்துவிடலாமென்று பார்த்தால் அதுவும் முடியாதுபோலிருக்கிறதே! என் செய்வேன்?" என்று கண்கலங்கினான்.

சந்திரா ஏதும் பதிலே பேசவில்லை. அவளால் துக்கம் தாங்கவில்லை. ஆதலால் கண்ணீர் பெருகப் போய்விட்டாள். ...தை எத்தனை திடமாக மாற்றியும் அவள் மனம் ஒரே தீவிர ...பிடிவாதத்தினின்று பிறழமாட்டாது உறுதியாகிவிட்டது. ...வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டாள். வழக்கம்போல ...களை வரிசையாகப் படுக்கவைத்தாள். தானும் படுத்தாள்.

இன்னதென்றறியாத சிறுமிகள் உடனே நித்திரையி...டார்கள். சீதா வீட்டு விலக்காகையினால் வீதிப்பக்

கத்து நடையில் படுத்திருந்தாள். நாராயணன் ஆபீஸிலும் உடல் நோக உழைத்துவிட்டுத் தலைக்குமேல் உள்ள கவலையினால் புரண்டு புரண்டு படுத்து யோசனையிலாழ்ந்திருந்தபடியே அயர்ந்து நித்திரை போய்விட்டான்.

சந்திராவுக்கு இவ்வுலகமும் தன்னுயிரும் சமூகக் கொடுமைகளுக்கு முன்பு ஒரு த்ருணமாகத் தோன்றியது. தான் ஒரு உபயோகமற்ற புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு உயிர்வாழவும் துணியவில்லை. தன் தந்தை இப்போது வீட்டை விற்று சங்கடப்பட்டுக் கொண்டே விவாகத்தை முடித்துவிட்டாலும் பணப்பேய் பிடித்த பிள்ளை வீட்டார் மீண்டும் பணங்கேட்டு விரட்டித் தன்னை வாழாது வைத்து தன் சகோதரி ஜானகியைப்போலச் செய்தால் அப்போது பிதா என்ன செய்வார். மற்ற பெண்களுக்கு என்ன வழி செய்வார். மனித காயத்தை நம்புவது எங்ஙனம் கூடும்?

அனித்யமான சரீரமாகையினால் தந்தை ஒருக்கால் மறைந்து விட்டால், காலும் புத்தியும் ஊனமாயுள்ள தன் தாயார் நிற்க நிழலுமின்றி கால் காசு வருமானமும் இன்றி இத்தனை பெயர்களையும் வைத்துக்கொண்டு என்ன விதமாகப் பிழைப்பாள்...அந்தோ! இப்போது வரதக்ஷிணையும் சீர்வகைகளும் பெற்ற கொள்ளைக்காரர்கள் ஒரு பைசாவுக்கு உதவுவார்களா!...மாட்டார்கள்.

சீச்சீ!...இத்தனை சங்கடத்திற்கும் நான்தான் காரணமல்லவா! என்னுயிரை மாய்த்துக்கொண்டால் இவ்வீடாவது தங்கும். பின்னர் வரும் எக்கஷ்டத்தையும் நான் காணவேண்டாம் தலை விதிப்படி ஆவதுடன் இதற்காக உயிர் துறந்ததைக் கேட்ட - பார்த்த - பிறகாவது பிள்ளையைப்பெற்ற பாவிகளின் மனமிரங்காதா! பிள்ளைகளாகப் பிறந்த கட்டைகளுக்குத்தான் உணர்வு ஏற்படாதா!...

ஆம்...இனி தாமதிக்கமுடியாது. இதுதான் சரியான சமயம் எல்லோரும் அயர்ந்து தூங்குகிறார்கள். இனி யோசனை என்ன... இப்பாழும் சமூகத்து ஊழலுக்கு என்னை பலியிட்டுக்கொள்வது தான் சரி.'' என்று துணிவுடன் எண்ணினாள். அயர்ந்து தூங்கு தன் சகோதரிகளை எல்லாம் ஒருமுறை பார்த்துக் கண்ணீர் உ தாள். கடவுள் உங்களுக்காவது வரதக்ஷிணைப் பேய்கள நல்ல இடத்தைக் காட்டிக் காக்கட்டும்.'' என்று கண்ணீர் தாள்.

ஒரு கடிதமெழுதி எடுத்துக்கொண்டாள். தன் முகத்தையும் மாதாவின் முகத்தையும் தூரவிருந்தபடியே நோக்கி வணங்கினாள். பிறகு சற்றும் தியங்காமலும் ச மலும் புறக்கடைக் கதவைத் திறந்துகொண்டு கிணற்

அக்கிணற்றைப் பார்த்ததும் அவளையறியாது ஓர் உற்சாகமும், உணர்ச்சியும் முகத்தில் ஓர் ஜோதியும் உண்டாகியது.

நிலவோ பால்போலக் காய்வதால் தான் அதிக நேரம் தாமதம் செய்தால் யாராவது பார்த்துவிடுவார்கள். பெரும் ஆபத்தாகி விடும் என்று எண்ணி வெகு தைரியமாயும் சந்தோஷமாயும் கிணற்றைச் சுற்றிவந்தாள். மானஸீகமாகக் கடவுளை வணங்கினாள். கிணற்று கைப்பிடியின்மேல் ஏறி கால்களை கிணற்றிற்குள் தொங்க விட்டு உட்கார்ந்தாள். கிணற்றுத் தாம்புக்கயிற்றை எடுத்து அதன் சுறுக்கைக் கழுத்தில் மாட்டிக்கொண்டாள்.

“ஆம்! இவ்வளவுதான்; வேலை. இனி முடிந்தது. ஏ கொடிய வரதக்ஷணை அரக்கனே! உலகத்தில் என்போன்ற எத்தனை ஏழைச் சிறுமிகள் உனக்குப் பலியானார்களோ! ஆகிறார்களோ! ஆகப் போகிறார்களோ! இனியாவது உன் உக்ரகத்தைக் கடவுள் [illegible] மக்களைக் காப்பாரா...சீச்சீ....மாய உலகம்! பாழும் உலகம்! கடவுளே! என்னுடைய சாவினால் நான் மட்டும் த்ருப்தியடைவது போதாது. உலகத்தில் இதனால் கிஞ்சித்தாவது நன்மை ஏற்படும் படியான வரனை அளிப்பதே என் கடைசி கோரிக்கையாகும். ஈசா! என் சகலமான பிழைகளையும், அபசாரங்களையும் மன்னிப்பாயாக...ஏ ஜலமே...ஏ கயிறே! நீங்களிருவரும் என் துயரத்தைப் போக்கி நிச்சலனமான நிம்மதியை அளியுங்கள். என் வாழ்நாளில் நான் அடையும் ஆநந்தம் இதுதான்...ஏ வரதக்ஷிணை அரக்கனே! இதோ என்னை பலி ஏற்றுக்கொள்ளும்’’ என்று கூறியவாறு சற்றும் தியங்காது கடவுளை நினைத்தபடியே கிணற்றிற்குள் குதித்தாள். அவளுடைய எரிந்த மனமும் கொதிக்கும் இருதயமும் குளிர்ந்த நீருடன் ஐக்யமாயின. அந்தோ! பரிதாபம்! இம்மாதிரி கண்ராவிக் காட்சிகள் உலகில் எத்தனை நடக்கின்றனவோ......

182985

182985

PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHAS

ஒரு வருஷ
சஞ்சிகை
இனும்.

மூன்று புதிய
சந்தாதாரர்களைச் சேர்த்து
முன்பணம் அனுப்புவோருக்கு

இனுமாக நாவல்கள் வேண்டுமா?

எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து
முன்பணமனுப்புகிறீர்களோ, அத்தனுவது
நம்பர் பங்கிலுள்ள புத்தகங்களில்

ஒன்று
இனும்

பங்கு-1.
நளினசேகரன்
வீரவஸந்தா
3 வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்

பங்கு-2.
பரிமளகேசவன்
உத்தமசீலன்
கதம்பமாலை
சுகந்தபுஷ்பம்

பங்கு-3.
கௌரீமுகுந்தன்
ஸாரமதி
சோதனையின் கொடுமை

பங்கு-4.
தியாகக்கொடி
நவநீதகிருஷ்ணன்
சாமளநாதன்
ருக்மிணீகாந்தன்
மங்களபாரதி

பங்கு-5.
வைதேகி
பத்மசுந்தரன்

"ஜகன்மோகினி" ஆபீஸ், திருவல்லிக்கேணி.

Devi Press, Madras.

தலை வலிக்கு

Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்

இருதயக் கோளாறுகளையும்

விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை

உபயோகியுங்கள்

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா பம்பாய்.